உ
கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி—சஅ.] நந்தன-வருடம் ஆடி—ஆவணிமீ [பகுதி கூ-கய.
Vol. 48. July—September 1952 No.9-10.

## இராமாவதாரத்திற் சில கவிநயம்.

திரு. சி. கணேசையரவர்கள், சுன்னாகம்.

கம்பர் இயற்றிய இராமாவதாரக் கவிகளுள் பற்பல மிகவும் நயமுடையன. அவற்றுள், சுந்தரகாண்டத்துள்வரும் சில கவிகளின் நயத்தை மாத்திரம் இப்போது எடுத்துக்காட்டுதும்.

புறத்துற லஞ்சி வேறோ ரரணம்புக் குறைதல் போக்கி
மறத்தொழி லரக்கர் வாழு மாநகர் மனுவின் வந்த
திறத்தகை யிராம னென்னுஞ் சேவகற் பற்றிச் செல்லும்
அறத்தகை யரசன் றிண்பே ராழியு மனைய னானான்.

இச்செய்யுள், கடல்கடந்து இலங்கைசெல்லு மநுமன் தரும தெய்வத்தால் விடுக்கப்பட்டு இலங்கைசெல்லும் அவனது ஆஞ்ஞா சக்கரத்தைப் போன்றான் என்னும் பொருளையுணர்த்துகின்றது.

(இதன் பொருள்) கடல்கடந்து இலங்கைசெல்லும் அநுமன் எதுபோன்றான் என்றால் இலங்கையில்வசித்த தருமதெய்வமானது இராவணன் தனக்கு இடர்செய்தலால், அங்கேவசித்தற்கு அஞ்சி அவ்விலங்கையைவிட்டுப் புறப்பட்டுத் தனக்குத் தஞ்சமாகத் தக்கவர்கள் யாரென்று தன்னுள்ளே ஒவ்வொருவராக நாடிற்று. நாடிய போது சிவன் திருமால் இந்திரன் என்னு முத்தேவர்களும் மற்றுமுள்ள தேவர்களும், முனிவர்களும் முதலாய யாவரும் அவனுக்கு அஞ்சித்திரிபவர்களாயே காணப்பட்டார்கள். அதனால் அவர்களிடம் போதலிற் பயனில்லை யென்றுகருதி, அவர்களிடம் தஞ்சம் புகுதலைவிட்டு, இனி யாரிடம்புகலாமென்று கருதி, அவதாரபுருடனாய் விளங்கும் ஸ்ரீராமனே இராவணனை வெல்லத்தக்கவனென்று

கருதி, அவனிடம்போய் அவனைத்துணையாகப் பற்றிக்கொண்டு (இராமன் எனக்குத் துணையானான் இனி யான் அச்சமின்றி இலங்கையிலும் என் ஆஞ்ஞையைச் செலுத்தலாமென்று துணிந்து) தன் ஆஞ்ஞாசக்கரத்தைச்செலுத்த அது போகுந்தன்மையையுமொத்தான் என்பது.

இதன்கண் தோன்றும் நயங்கள் எவையென்றால், திரிலோகங்களுள்ளும் இராவணனைவெல்லத்தக்க வீரன் ஸ்ரீராமனேஎன்பதும், இராவணன் அரசுசெய்யத்தொடங்கியபின் இலங்கையிலே தருமச்செயல் சிறிதும்கிடையாதென்பதும் அங்கேசெல்லும் அநுமனுடையசெலவே, தருமச்செயல் இலங்கையிலும்தோன்றுதற்கு ஒரு தொடக்கமானகாலம் என்பதுமே.

இந்நயங்கள் எப்படித்தோன்றின என்றால், 'புறத்துறல் அஞ்சி' என்றதனால் தருமதெய்வம் இராவணனால் அகற்றப்பட்டது என்பதும், 'வேறோ ரரணம்புக் குறைதல் போக்கித்—திறத்தகை இராமனென்னுஞ் சேவகற் பற்றி' என்றதனால் திரிலோகங்களுள்ளும் ஸ்ரீராமனே சிறந்தவீரன் என்பதும், ஆழிபோன்றானென்றதனால் அநுமன் போனகாலமே தருமம் அங்கே உண்டாவதற்கு ஒரு தொடக்கமான காலம் என்பதும் தோன்றின என்பது.

இராவணாதி இராக்கதர் இறத்தற்கும், அவர்கள் இறந்தபின் அங்கே தருமம் வளர்தற்கும் அநுமன்செலவே ஒரு தொடக்கமான காலம் என்பதை உணர்த்தற்கு, ஆசிரியர், இராமனைத்துணையாகப் பற்றி தருமதெய்வம் சென்றதுபோன்றான் என்னாது அதன் ஆழி சென்றதுபோன்றான் என்று கூறியதே, அவர் மதிநுட்பத்தை யாவரும் வியக்கத்தக்கதாக அமைந்த நயம் என்க. 'இராமற்பற்றி' என்றதனால் இராமனாலேயே இலங்கையில் இனி அறம் நாட்டப்படும் என்பதும் பெறப்படும். அதுவுமோர் நயம். இராமன் நாட்டுதற்கு அநுமன்செலவே ஒரு தொடக்கமான காலம் என்க. புறத்துறலஞ்சி என்பதற்கே, வேறிடத்திருத்தற்கு அஞ்சி என்றும் பொருள் கூறலாம். இராவணனுக்கு, சிவன் திருமால் இந்திரன் என்னு மூவருந் தோற்றார் என்பதை,

> "முழுவா னவரா யுலகமொரு மூன்றுங் காக்கு முதற்றேவர்
> மழுவா ணேமி குலிசத்தின் வாய்மை துடைத்த மார்பானை"

(ஊர்தேடு. உகரு) என்னுஞ் செய்யுளான்றிக.

இனி அநுமன் இலங்கைசெல்லும்போது பின்தோன்றும் அவன் வாலுக்குக் கம்பர் ஓர் உவமை கூறுகின்றார். அதுவும் மிக நயமுடைத்தாகவும் இன்பமுடைத்தாகவும் காணப்படுகின்றது. அதனையும் இங்கே காட்டுதும்.

விளித்துப்பின் வேலைதாவும் வீரன்வால் வேதமெய்க்கும்
அளித்துப்பி னநுமனென்னு மறந்துணை பெற்றதாயும்
களித்துப்புன் றொழின்மேனின்ற வரக்கர்கண் ணுறுவராமென்
றொளித்துப்பின் செல்லுங்கால பாசத்தை யொத்ததன்றே.

இச்செய்யுள் இலங்கைசெல்லும் அநுமனுடைய வால், இலங்கை செல்லற்கு அநுமனைத் துணையாகப்பெற்றும், அரக்கருக்குப்பயந்து அவனுக்குப் பின்புறமாக மறைந்துசெல்லும் காலபாசத்தை ஒத்தது என்னும்பொருளை யுணர்த்துகின்றது.

(இதன் பொருள்) ஆரவாரித்துப் பின் கடலைக்கடந்துசெல்லும் அநுமன்வால் (எதுபோன்றதென்றால்) வேதம்போன்ற அருளின் வலியையுடைய அநுமனென்கின்ற அறத்தெய்வத்தின் ஆழியைத் துணையாகப்பெற்றும், கருவமுற்று இழிதொழிலையே மேற்கொண்டு செய்கின்ற இராக்கதர்கள் காண்பார் என்று அவர்களுக்கஞ்சி அநுமன்பின்னாக ஒளித்துச்செல்லுகின்ற காலபாசம் போன்றது; என்பது. ஏய்க்கும்-எய்க்கும் எனக் குறுகிற்று. வேதம்போலும் என்பதை, அளியொடுமுடிப்பதிலும் அநுமனொடுமுடித்தலே சிறப்பாம். வேதம்போலும் தப்பாத வாக்குடையவன் என்பது கருத்து. மெய்க்கும்-புகழும்; என்பாருமுளர். எய்க்கும் என்று பிரித்து, அறியும் என்றுமாம்.

இதன்கண் தோன்றிய நயம் எவையென்றால், அநுமன் இலங்கை செல்லு முன்னே, அங்கே இயமனும் இராக்கதருக்கு அஞ்சிப் போவதில்லை என்பதும், அநுமனென்னும் வீரன்போன நாட்டொட்டே அங்கே இயமனும் போகத் தொடங்கினன் என்பதுமே.

இந்நயங்கள் எப்படித் தோன்றின என்றால், அரக்கர் கண்ணுறுவராமென்று ஒளித்துப் பின்செல்லும் காலபாசம் என்றதனால், இயமனும் அங்கே அஞ்சிப் போவதில்லை என்பதும், அநுமனென்னும் அறந் துணைபெற்றதாயும் என்றதனால் அநுமன்போன பின் இயமனும் போனான்என்பதும் தோன்றின. இங்கே ஆசிரியர் அநுமனுடைய வாலுக்கு, காலபாசத்தை உவமைகூறுவாராய்,

வால் பின்புறத்துள்ளதாதலின், பின்புறத்து அக் காலபாசம் வந்தமைக்கு ஓர் காரணங்கற்பிக்கவேண்டுமென்று கருதி அதற்குக் காரணமாக, "அரக்கர் கண்ணுறுவாரமென்று ஒளித்து" என ஒளித்துவருதலைக் கூறியதே, அவர் மதிநுட்பத்தைக்காட்டி நயமும் இன்பமும் தோன்றநின்றது என்க. அநுமன்வால் பின்னே இலங்கைக்கு எரியூட்டிப் பலஇராக்கதரையும் அழியச்செய்ததாகக் கூறலின், அத்தகைய வாலுக்குக் காலபாசத்தை இங்கே எடுத்துக் கூறியதே மதிநுட்பம். இக்காலத்தும் ஒரு வலியவனுல் அடிபட்ட ஒருவன், ஒரு வலியவனைத் துணையாகப்பற்றிக்கொண்டு அவனை முன்செல்லவிட்டுத் தான் பின்னே மறைந்துசென்று, முன்போன வலியவன் துணைகொண்டு தன்பகைவனை அடிப்பது வழக்கம். அத்தன்மையை இங்கே காலபாசத்திலேற்றிக் கூறியதும் மிகவும் இன்பமும் வியப்புந் தரத்தக்கதென்க.

இனிச் சீதை அநுமனைப் புகழ்ந்துகூறுமிடத்து, தான் உயிர் விடப்போகும்போது அவன் வந்து மீட்டமையைக் குறித்துப் புகழ்ந்து கூறுவது மிகவும் நயமுடையது. அதனையும் ஈண்டுக் காட்டுதும்.

மும்மையா முலகந் தந்த முதல்வற்கு முதல்வன் றூதாய்ச்
செம்மையா லுயிர்தந் தாய்க்குச் செயலென்னு லெளிய துண்டோ
அம்மையா யத்த னுய வப்பனே யருளின் வாழ்வே
இம்மையே மறுமை தானும் நல்கினை யிசையோ டென்றாள்.

இச்செய்யுள் 'எமது நாயகருக்குத்தூதாகி யான் வலிந்து உயிர்விடச் செல்லுஞ்சமயத்திலே வந்து என்னுயிரைத் தந்த உனக்கு யான் செய்யுங் கைமாறில்லை' என்று அநுமனுக்குச் சீதாபிராட்டி சொல்லுதலை யுணர்த்துகின்றது.

(இதன் பொருள்) என் அன்னையும் அத்தனுமாய அப்பனே! அருளுக்கு வாழ்விடமாயுள்ளவனே! நீ மூன்றுலகையுந்தந்த முதல்வற்கும் முதல்வனுய ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் அவதாரமாய் விளங்கும் எமது பிராணநாயகற்கு ஒரு தூதனுய், இங்கேவந்து நான் இறவாமல் தடுத்து என்னுயிரைத் தந்தாய். அங்ஙனந் தந்த உனக்கு என்னுற் செய்யக்கிடந்த பதிலுதவி எளிதிற் செய்யத்தக்க தொன்று உண்டோ? (இல்லை); அங்ஙனம் பதிலில்லாத உதவியான உயிர்தந்ததொன்றோ? அதனுல், இம்மையும் தந்தாய்;

அஃதொன்றோ? இசையோடு மறுமையுந் தந்தாய். இங்ஙனம் உயிர் தந்ததின்மேலும் செய்த இவ்வுதவிகளுக்கு எளிதானதென்றதை விட வேறு எளிதானதொன்றின்மையின் பதில் இல்லையென்று யான் சொல்லவும்வேண்டியதில்லை என்றாள் என்பது. (எளிதான தென்றதைவிட வேறு எளிதானதின்மையின் பதில் இல்லை என்று யான் சொல்லவேண்டியதில்லை என்பது எஞ்சிநின்றது.)

இனி இதன்கண் தோன்றிய நயங்கள் எவையென்றால், யான் உயிர்விடக்கருதியகாலத்து வந்து உயிர்தந்தது எல்லாவுலகும் தரினும் போதாமையின் கைமாறில்லாததோர் உதவியென்பதும், இதன்மேலுஞ் செய்த நன்றிகளுக்கு எளிதென்றதற்குமேல் எளிதாயதொன்றின்மையின், அவற்றின்பதில் எளியதுஉண்டோ? என்று யான் நினைக்கவும் வேண்டாம் என்பதுமே.

இவை எவற்றாற் பெறப்பட்டனஎன்றால், உயிர்தந்தாய்க்குச் செயலென்னை எளியதுண்டோ? என்றதனால் உலகெலாம் தரினும் போதாததொரு பெருநன்றியென்பதும், இம்மையே மறுமை தானும் நல்கினை இசையோடு என்றமையால் உயிர்தந்ததன்றி அதன்மேலுஞ் செய்த உதவிகளாகிய இவற்றிற்குமுன் போதாதென்ற உலகைவிட வேறாக ஓர் உலகின்மையின் பதில்உண்டோ வென்று நினைக்கவும்வேண்டியதில்லை என்பதும் பெறப்பட்டன.

எளிதுண்டோவென்றது செய்யாமற்செய்த வுதவி வையகத்தினும் வானகத்தினும் பெரிதாதலானும், காலத்தினாற்செய்தவுதவி ஞாலத்தின் மாணப்பெரிதாதலானும், பயன்கருதாதுசெய்தவுதவி கடலிற்பெரிதாதலானும், அவைமூன்றும் ஒன்றாய் அமைந்த இவ்வுதவிக்கு வையகமும் வானகமும் மாத்திரமல்ல; எல்லாவுலகுந் தரினும் போதாதென்பாள் எளியதுண்டோ? என்றும், இங்ஙனம் உயிர்தந்தவுதவிக்கு எல்லாவுலகும் போதாதாகவே அதன்மேலுஞ் செய்தனவற்றிற்கு, போதாதென்ற எல்லாவுலகையும்விட வேறு உலகின்மையின் பதிலுண்டோஎன்று நினைக்கவும்வேண்டாம் என்பாள், உயிர்தந்தாய்க்கு எளியதுண்டோ என்றதன்மேலும் இம்மையே மறுமைதானு நல்கினை யிசையோடென்றும் கூறினாள். இங்ஙனம் உயிர்தந்தாய்க்கு எளியதுண்டோ என்றதன்மேலும் "இம்மையே மறுமைதானும் நல்கினை யிசையோடு" எனக்கூறி, இந்நன்றிகளுக்கு எளியதுண்டோஎன்று நினைக்கவும்வேண்டியதில்லை என்

பதை உய்த்துணர்ந்துகொள்ளுமாறுவைத்த கம்பர்சாதுரியம் எத்துணைப் பெரியதென்பதை அறிஞர்கள் சிந்திப்பார்களாக. இங்ஙனமன்றி, நன்றிகளை ஒருங்குசேர்த்துமுடித்துப் பொருள்கோடல் இத்துணை நயமுடைத்தன்றென்க.

இனி, வலிந்து உயிர்விடச்சென்றநேரத்திலே வந்து என்னுயிரை மீட்டு எனக்கு இரண்டாம்பிறப்பை ஈந்தாய் நீயே ஆதலின், அப்பிறப்புக்கு நீயே அன்னையானாய் என்பாள் அன்னையாய் என்றும், தன் பிள்ளையைக்காணவிடத்து, எங்கும் நாடிச்சென்று அப்பிள்ளையைக்கண்டு அழைத்துக்கொண்டுபோய்க் காப்பாற்றுவன் தந்தையே ஆதல்போல, நீயும் யானிருக்குமிடமெல்லாந்தேடி அலைந்து இங்கேவந்து என்னுயிரைக் காப்பாற்றினாய் ஆதலின் தந்தையுமானாய் என்பாள் அத்தனாய் என்றும், தந்தைகட்டளைப்படி தாயைச்சென்றுநாடும் பிள்ளைபோல, நீயுமென் பிராணநாயகர் சொற்படி என்னை நாடிவந்து என்னைக் காப்பாற்றினையாதலின் நீ என் மகனுமானாய் என்பாள் அப்பன் என்றுங் கூறினாள். இன்னும், இராவணன் தன்னைக் கவர்ந்து தனக்குக் குடிப்பழியை வருவித்தானே என்பதனாலுண்டான அபிமானத்தினாலே கோபம் ஒருபுறம் தோன்றவும், தன்னைக் கண்டபொழுதே தாயைக்கண்டதுபோன்ற இரக்கத்தோடு கதறிஅழும் அழுகை ஒருபுறந்தோன்றவும் வந்து நின்ற அநுமனைக் கண்டபொழுதே, தனித்துத் துயரத்தோடு தூரமான இடத்தில் சென்றிருக்குந் தாய்க்குத் தன் பிள்ளையைக்கண்டவிடத்து எவ்வளவு அன்பும் மகிழ்வுமுண்டாகுமோ? அவ்வளவு அன்பும் மகிழ்வும் பிராட்டிக்குந் தோன்றினமையானும், அப்பனே! என விளித்தாள் பிராட்டி என்க.

பிராட்டி நெஞ்சுருகி அப்பனே! என்று விளித்தமையே அவ்வன்பைக் காட்டுகின்றது என்க. முன்இருசொல்லையும் அடையாக வைத்து, அப்பனேஎன்பதைத் தனித்து விளியாகக்கொள்ள வைத்து அவ் விளியால் பிராட்டியின் உருக்கத்தைத் தோற்றுவித்த கம்பரின் சாமர்த்தியம் மிக வியக்கத்தக்கதென்க. இவ்வாறு சொற்களையும் நயம்படத் தொடுத்தல் இவர்க்கு இயல்பென்க. அப்பன், என்பதற்கு மகோபகாரஞ்செய்கிறவன் என்றும் உரை கூறலாம். (திருவாய்மொழி ச-ம்பத்து. எ-ம் திரு. ரு-ம் செய்யுள் உரை)

இனி, சீதாபிராட்டிக்கு இராமன் பர்ணசாலையில் உன்னைக் காணானும் உயிருளனாயிருந்தான் என்ற அநுமன், அதன் காரணத்தை யுணர்த்துகின்றமையை ஒரு செய்யுளாற் கூறுகின்றார். அதுவும் மிக நயமுடைத்தாதலின் அதனையும் ஈண்டுக் காட்டுதும்.

தேன்டிகேர் கண்டேன் வாழி தீதில னெங்கோ னாகம்
பூண்டமெய் யுயிரே போகப் பொய்யுயிர் போல நின்ற
ஆண்டகை நெஞ்சி னின்று மகன்றிலை யழிவுண் டாமோ
ஈண்டுநீ யிருந்தா யாண்டை யெவ்வுயிர் விடுமி ராமன்.

இச்செய்யுள் நீயே எம்பெருமானுக்கு உயிர் என்றும், உன்னை யிழந்தபின் அவன் ஒரு பொய்யுயிருடையவனா யிருக்கின்றானென்றும், அங்ஙனமவன் இருத்தற்குக் காரணம் உன்னை அவன் மறவாமையே என்றும் பிராட்டிக்கு அநுமன் கூறுதலை உணர்த்துகின்றது.

(இதன் பொருள்) உடம்பிற்பொருந்திய உண்மையுயிர் போய்விட ஒரு பொய்யுயிரைப் பெற்றுநின்றாற்போல நின்ற ஆண்டகையின் நெஞ்சினின்றும் நீ அகன்றாயில்லை. (நீ களவுபோயும் உன்னை அவன் வெறுக்கவில்லை.) அங்ஙனமாக அவனுக்கு அழிவுவருமோ? (நீ அகன்றிலாய் அதனாற்றான் 'உண்டுயிரிருந்தான்' என்றபடி.) அங்ஙனம் வாராதாயினும் அவன் உயிருடையவனாயிருக்கவில்லை; உடம்புமாத்திரையாயே யிருக்கின்றான். ஏனெனின் மெய்யுயிராகிய நீ பிரிந்துவந்து இங்கேயிருந்தாய் (அங்ஙனமாக) அங்கே அவன் எவ்வுயிரைவிடுவான்? (அதனால்) அவனுயிராகிய உன்னை யான் தேடி நேரே கண்டுகொண்டேன். இனி உயிராகிய உன்னைப்பெற்று எங்கோனும் ஆகம் தீதிலனாய் வாழ்க என்பது. வாழி என்பதைச் சீதைக்கேற்றுவதினும் இதுவே சிறப்பாம். பொய்யுயிர்—இயக்கு தன்மாத்திரையாயுள்ள உயிர்; இயந்திரஉயிர் என்றபடி; "இன்னுயிரின்றி யேகு மியந்திரப் படிவ மொப்பான்" என்று பின்னும் (எ.அ. உருக்காட்டு.) கூறுதல் காண்க.

இனி இதன்கண் தோன்றிய நயங்களெவை? என்றால், இராமபிரானுக்குப் பிராட்டியாகிய நீயே உயிரென்பதும், உயிராகிய உன்னை இழந்தபின் இராமன் உயிரின்றி உடம்புமாத்திரையாய் இருக்கின்றானென்பதும், உயிராகிய உன்னைக்கண்டேன் ஆதலால் அவன் உயிர்பெற்றவனே; அவனுக்கு இனி அழிவில்லை என்பதுமே.

இங்ஙனங்கள் எப்படித் தோன்றினவென்றால், 'மெய்யுயிர் ஏக' என்பதனால், மெய்யுயிர் நீயே என்பதும், 'பொய்யுயிர்போல நின்ற' என்றதனால் உடம்புமாத்திரமாய் நின்றான் என்பதும், தேண்டிநேர் கண்டேன் வாழி தீதில னெங்கோ னுகம்' என்றதனால், உயிர்பெற்ற வனே; அவனுக்கு அழிவில்லை என்பதும் தோன்றின என்க.

இங்கே ஈண்டு நீ யிருந்தாய் ஆண்டு எவ்வுயிர் விடும் இராமன் என்பதனால் சீதையே உயிராதலைச் சாதித்துவிட்டுப் பின் அவ்வுயி ரைத் தேண்டி நேர்கண்டேன் என்று கூறியது, எவ்வளவு இன்ப மும் சாதுரியமுமாக இருக்கின்றது! இங்ஙனம் புணர்த்த கம்பன் சித்திரம், எக்கவியால் இயற்றத்தக்கது? இனி, உலகில் உயிரைக் கண்ணாலே காண்பாரில்லை; ஆயின் யானோ பிரானுருயிரைக் கண் ணாலே கண்டேன் என்பான், நேர்கண்டேன் என்றான். முன்னும், சீதையைக் கண்டபொழுதே, அநுமன், "கள்ளவா ளரக்கன்கற் கமலக் கண்ணனார்—உள்ளுறை உயிரினை ஒளித்து வைத்தவா?" என உயிரென்றே ஆண்டுங் கூறுதல் காண்க. இன்னும் உயிரை நேரேகண்டேன் என்றதில், உயிர்தான் என்பதையும் நேரே கண் டேன் என்பதும் தோன்றநின்றது. உயிர்தான் என்பதை எப்படிக் கண்டான் என்றால், பிரானுரைப்பிரிந்த துக்கத்தால், கண்ணின் நீர்த்தடத்திடை அன்னம்போலிருந்தமையானும், நீராடலும் உணவுந் துயிலுமின்றி இருந்தமையானே மாசுண்ட மணிபோல வும், ஞாயிற்றின்முற்பட்ட திங்கள்போலவும் ஒளிகுன்றிய உடம் பினளாயும், காசுண்ட கூந்தலாளாயும் இருந்தமையானும் இரா வணன் வந்துவேண்டியபோது கடுங்கோபத்துடன் ஒரு துரும்பைப் பார்த்து வைதமையானும், துயர்தாங்கமுடியாது உயிரைவிட நினைந்தமையானும் கண்டான் என்க. இங்ஙனம் கண்டமையாற் றான், பின் இராமபிரானுக்கு,

விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீ ரிலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டே னல்லேன்
இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றுங் களிநடம் புரியக் கண்டேன்.

என்றான் அநுமன் என்க.

# * அகத்திணை வகுப்பு

வித்துவான், பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் எம்.ஏ., பி.ஓ.எல்.

உலகத்து உயிர்கள் யாவும் இன்பத்தையே நாடுகின்றன. இந்த இன்பம் சிற்றின்பம், பேரின்பம் என இருவகைப்படும். சிற்றின்பத்தை உலகஇன்பமெனவும் பேரின்பத்தைக் கடவுள்இன்பமெனவுங் கூறலாம். உலகஇன்பத்தை அனுபவித்து அதன் நிலையின்மையை உணர்ந்தபின்பே என்றுமழியாத பேரின்பத்தை உயிர்கள் நாடுவதியல்பு. இந்த உலகஇன்பங்களுக்குள்ளே ஒத்ததலைவனும் தலைவியுங்கூடி அனுபவிக்கும் காதலின்பமே மிகச்சிறந்தது. அனுபவிக்கும் இருவரும் தங்கள் உள்ளத்தால் உணர்ந்து இன்பம் அடைவதாலும் பிறர்க்கு அவ்வின்பம் இத்தன்மையது என்று எடுத்துரைக்க முடியாதாகையாலும் அவ்வின்பத்தை 'அகம்' எனப் பழந்தமிழ்இலக்கியங்கள் போற்றின. இவ் வின்பவாழ்வில் ஏற்படும் உணர்ச்சிவேறுபாடாகிய இரங்கல், ஊடல் முதலியவற்றைத் 'திணை' என்றனர். ஆகவே 'அகத்திணை' என்றால் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உளதாய காதல் ஒழுக்கம் எனப்படும். / இந்த இன்பத்தை நுகர்ந்து நிலையாமை கண்டு, மனத்தூய்மை பெற்று அடையவிரும்பும் வீட்டினையும், அதற்குக் கருவியாகிய அறத்தினையும், அறஞ்செய்வதற்கு இன்றியமையாத பொருளினையும், அப்பொருளினைப் பாதுகாத்துப் பெருக்குதற்கும் வாழ்வில் ஏற்படும் இடையூறுகளை நீக்குதற்கும் நிகழ்த்தப்படும் போரினையும், 'புறப்பொருள்' என்றனர்.

இனி, காதல்வாழ்வின் ஒழுகலாறுகளை நம் முன்னோர் எவ்வாறு வகுத்துரைத்தனர் என்று பார்ப்போம். ஒரு தலைவனுக்கும்

---

* இலங்கை வானொலி நிலையத்தில் ஒலிபரப்பிய பேச்சு.

ஒரு தலைவிக்கும் இடையில் ஏற்படுங் காதலை ஒருபாற்காதல், ஒத்த காதல், ஒவ்வாக்காதல் என மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். ஒரு பாற்காதலைக் கைக்கிளை என்பர். ஓர் ஆடவனிடத்தேனும், ஒரு பெண்ணிடத்தேனும் தனிப்பட்ட முறையில் ஏற்படுங் காதல் ஒரு பாற்காமம் எனப்படும். ஒவ்வாக்காதல் என்பது தலைவன் தலைவி யாகிய இருவரும் தம்மிடையே உண்மைக்காதலில்லாது வாழும் வாழ்க்கையே. இதனைப் பெருந்திணை என்பர். ஒத்தகாதல் ஐந்து வகைப்படும். அவையாவன:— குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, பாலைத்திணை' மருதத்திணை, நெய்தற்றிணை என்பனவாம். முன்னே குறிப்பிட்ட கைக்கிளை பெருந்திணை என்னும் இரண்டுடன் இந்த ஐந்தும் சேர அகத்திணைகள் ஏழாகும். இவற்றுள், பல வழிகளில் ஒத்த தலைவனும் தலைவியுங் கூடி இன்பவாழ்வு நடத்தும் நெறி ஐந்திணையேயாதலின், இந்த ஐந்திணையை 'அன்பின் ஐந்திணை' எனப் புலவர்பெருமக்கள் போற்றினர். ஒருபாற்காதலும் பொருந்தாக் காமமும் ஆகிய கைக்கிளை பெருந்திணைகளைப் போலாகாது பிறப்பு, ஒழுக்கம், வயது, உருவம், அன்பு, நிறை, அருள், அறிவு, செல்வம் முதலிய பல துறைகளிலே ஒத்த தலைவனும் தலைவியும் சேர்ந்து, ஈருயிர்க்கு ஒருடல் என வாழும் வாழ்க்கையாகையால், இந்த ஐந்திணை வாழ்வுக்கே நமது முன்னோர் நிலம் பொழுது முதலிய வற்றை வகுத்துளர்.

இந்த ஐந்திணை ஒழுக்கங்களுள்ளே குறிஞ்சி என்பது புணர்த லும், புணர்தல் நிமித்தமும்; பாலை பிரிதலும் பிரிதல் மித்தமும்; முல்லை இருத்தலும் இருத்தல் நிமித்தமும்; மருதம் ஊடலும் ஊடல்நிமித்தமும்; நெய்தல் இரங்கலும் இரங்கல்நிமித்தமுமாகும். இந்த ஒழுக்கங்கள் எல்லாக் காதலர்களிடத்தும் நிகழ்வனவெனி னும் இடத்துக்கேற்பவும் காலத்துக்கேற்பவும் அவை மிகுந்து விளங்கும் இயல்புமுடையன. உதாரணமாக நெய்தல்நிலத்தையும் மாலைப்பொழுதையும் எடுத்துக்கொள்வோம். மீன் பிடிக்கக் கடல்

மீது படகோட்டிச்சென்ற ஒருவன் பொழுதுபட்டும் திரும்பிவரவில்லை. நேரஞ்செல்லச் செல்ல அவனுடைய காதலிக்குத் தன் காதலனைக்காணவில்லையே என்ற எண்ணம் இரக்கத்தையுண்டாக்குமன்றோ? பறவைகள் கூடுநோக்கிச் செல்வதையும், நிலாக்கதிர் கடல் மேற் பரப்பதையும் அவள் காண்கிறாள்; கடல் ஒலிப்பதையும் கேட்கிறாள். இவை அக் காதலியின் இரக்கத்தை அளவின்றி மிகச்செய்கின்றன. இதனால், இரங்குதலுக்கு நெய்தல்நிலமும் மாலைப்பொழுதும் மிகப் பொருத்தமாய் அமைந்து உள்ளன என்பதை நாம் நன்கு அறியலாம்.

இவ்வாறே புணர்தலுக்குக் குறிஞ்சிநிலமும், ஊடலுக்கு மருத நிலமும், பிரிதலுக்குப் பாலைநிலமும் வாய்ப்புடையனவாய் இருப்பதை அறிந்த புலவர்கள் இந்தத் திணைகளின் பெயராலேயே நிலங்களையும் வழங்கினர். இதற்கு வேறு காரணங் கூறுவாருமுளர், நிற்க.

இயற்கையிலே திளைத்து, இயற்கையோடு ஒன்றி, இயல்பினால் இல்வாழ்க்கையை நடத்திய தமிழ்மக்கள் தாம் வாழ்ந்த இடத்துக்கேற்பத் தம் வாழ்க்கையை நடத்தினர். தாம் வாழ்ந்த இடத்தை இயற்கையான ஒழுக்கத்திற்கேற்பச் சிறந்த பெயரிட்டும் வழங்கலாயினர். மலையையும் மலைசார்ந்த இடத்தையும் குறிஞ்சி என்றனர். வயலையும் வயல்சார்ந்த இடத்தையும் மருதம் என்றனர். கடலையும் கடல்சார்ந்த இடத்தையும் நெய்தல் என்றனர். காட்டையும் காட்டைச்சேர்ந்த இடத்தையும் முல்லை என்றனர். வனாந்தரத்தைப் பாலை என்றனர்.

இந்த ஐவகை நிலங்களைப் பற்றியும், இவற்றிலே வாழ்ந்த மக்கள் வாழ்க்கையினைப் பற்றியும், அவர்களுடைய எண்ணங்கள், உணர்ச்சிகள், குறிக்கோள்கள் முதலியவற்றைப்பற்றியும் மிகச் சிறப்பாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் உரைக்கின்றன. ஐந்து

திணையாக வகுக்கப்பட்ட காதல்ஒழுக்கத்தின் ஐந்துபிரிவுகளும் உரிப்பொருள் எனப்படும். இந்த ஒழுக்கம்நிகழும் இடமும் காலமும் முதற்பொருள் எனப்படும். பொழுதுஎன்பது காலம். இது பெரும்பொழுது சிறுபொழுது என இருவகைப்படும். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்எனும் ஆறும் பெரும்பொழுதாகும். மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு என்பன சிறுபொழுதுகளாகும். ஒவ்வொரு நிலத்திற்கும் பெரும்பொழுதுகளும் சிறுபொழுதுகளும் தனித்தனி வகுக்கப் பட்டுள்ளன.

நிலமுங்காலமும் பற்றித் தோன்றும் பலவகைப் பொருள் களெல்லாம் கருப்பொருள் எனப்படும். தெய்வம், விலங்கு, பறவை, மரம், மக்கள், தொழில், பறை, யாழ் முதலியன பிரதான கருப்பொருள்கள். குறிஞ்சிநிலத்திலே வாழ்ந்த மக்கள் முருகனை வழிபட்டனர். மலையில் விளையும் தினை, மூங்கிலரிசி, ஐவனநெல் என்பனவற்றை உணவாகக்கொண்டனர். தேன்எடுத்தல், கிழங்கு கிண்டியெடுத்தல் முதலியன அவர்கள் தொழில். அருவியுஞ் சுனையுமே அவர்களுடைய நீர்நிலைகள். புலி, யானை, கரடி, பன்றி முதலியனவே அங்குள்ள மிருகங்கள். தேக்கு, வேங்கை, சந்தனம், அகில்முதலியன குறிஞ்சிநில மரங்களாகும். மயிலுங்கிளியும் அந் நிலத்துக்குரிய பறவைகள். குறிஞ்சிப்பூ வேங்கைப்பூ என்பன ஆங்குள்ள பூக்கள். தொண்டகப் பறையும், குறிஞ்சியாழும் அந் நிலத்துக்குரிய இசைக்கருவிகள். மலையில் உள்ள ஊர்கள் சிற்றூர் குறிச்சியென வழங்கப்படும். குறிஞ்சிநில மக்களை வேடர் குறவர் குறத்தியர் எனக் கூறுவர். இதுவரை குறிஞ்சிநிலக் கருப்பொருள் களைச் சுருக்கமாக எடுத்துக்கூறினேன். இவ்வாறே ஏனைய நான்கு நிலங்களுக்கும் கருப்பொருள்கள் உள. அவற்றினை இப்பொழுது எடுத்துக்கூற நேரம் போதாதாகையால் அகத்திணைச்செய்யுள்கள் இரண்டொன்றைப் படித்துச் சுவைப்போம்.

இச் செய்யுள்களிலே ஐந்திணைக்கும் உரிய முதல் கரு, உரியெனும் முப்பொருள்களும் வருவதைக்காணலாம். இம்முப்பொருள்களுள்ளே உரிப்பொருளே மிகச்சிறந்தது. முதற்பொருளும் கருப்பொருளும் இந்த உரிப்பொருளைச் சிறப்படையச் செய்வதற்கு உபகாரப் படுவனவாகும். அவையெல்லாம் காட்சிப்பொருள்களாகும். புணர்தல், பிரிதல், இரங்கல், இருத்தல், ஊடல் எனும் உரிப்பொருள்களோ, உணர்ச்சியை அடிப்படையாகக்கொண்ட கருத்துப் பொருள்களாகும். ஆகையாற்றான் இவற்றைச் சிறந்தன என நம் முன்னோர் போற்றினர். அகத்திணைப்பாடல்கள் யாவும் இந்த உணர்ச்சிகளை அழகாகத் தீட்டிக் காட்டுகின்றன. உள்ளுறை உவமைப்பொருள், இறைச்சிப்பொருள் முதலியவற்றினாலும் பாட்டுகளிலுள்ள பொருள்கள் சிறப்படைந்து அவற்றைக் கூறுவார் தம் உள்ளக்கருத்தைச் செவ்விதிற் புலப்படுத்துகின்றன.

தலைவன், தலைவியுடன் காதல்மணம் புரிந்து சுற்றத்தார் அறியாமல் வாழ்கின்றான். களவிரவில் வந்து தலைவியைச் சந்திக்கின்றான். பல கொடிய மிருகங்கள் நிறைந்த மலைச்சாரல் வழியே கரடு முரடான பாதையிலே இராக்காலத்தில் வருவதால், தலைவனுக்குத் தீங்குவருமே என்று தோழி அஞ்சுகிறாள்; தனது அச்சத்தை அழகாகப் புலப்படுத்துகிறாள். 'நாம் இன்பமாகஇருக்கவேண்டுமாயின், நீ இனி இப்படி இருட்டிலே வரலாகாது' என்று வேண்டுகிறாள்.

"கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை உய்யாக்.காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர்செகுக்கும்
சாரல் நாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே."

என்பது தோழிகூற்று. இது குறிஞ்சித்திணைப்பாடல். 'ஆண் குரங்கு இறந்துவிட்டது. அதனைப்பிரிந்து தனிமையாக வாழ முடி

யாத பெண்குரங்கு தன் பச்சிளங்குட்டியைத் தன் சுற்றத்திடைச் சேர்க்கிறது. தன் துன்பத்தைப் போக்குவதற்காக உயர்ந்த மலையில் ஏறிப்பாய்ந்து உயிரை விட்டுவிடுகிறது. இத்தகைய மலையை உடைய தலைவனே! நீ நடுச்சாமத்தில் வாரற்க. நின் வருகை எமக்கு வருத்தத்தை உண்டுபண்ணுகிறது;' என்று தோழி சொன்னாள். இவ்வளவு மாத்திரம் அன்று. 'உன் நிலத்திலுள்ள பெண் குரங்கு எவ்வளவு கற்பு உடையது என்பதை நீ அறிவாய். ஆண் குரங்கு இறந்தவுடன் அதுவும் இறந்துவிடுகிறது. இதனை அறிந்த நீ, இரவில் வரும்பொழுது உனக்கு இடையூறு ஏற்படின் என் தலைவியும் அதுபொழுது இறந்துவிடுவாள் என்பதைக் கூறவும் வேண்டுமோ?' என்பதையும் உணரவைக்கிறாள் குரங்கின் கதையினால். இப்படி இருவருடைய உயிர்க்குந் தீங்குநேரிடாது விரைவில் மணஞ்செய்துகொள் என்பதே முடிவான வேண்டுகோள்.

இனி, மனம்ஒன்றிய காதலரின் பேச்சொன்றைக் கேட்போம். ஒரு தலைவனும், தலைவியும் ஊழ்வயத்தால் ஒன்றுகூடி இன்புறுகின்றனர். அன்புடைய நெஞ்சம் இரண்டும் ஒன்றையொன்று கலந்து ஒருதன்மையாய் இருக்கின்றன. செம்மண்நிலத்திற் பெய்த மழைநீர் எப்படி அந்நிலத்தின் இயல்பை அடைகிறதோ அதுபோலவே இருவரும் கலந்துளர். இப்படி இயற்கையாக ஏற்பட்ட கலப்புக்கு இடையூறு வருமோ? தலைவன் தன்னைவிட்டுப் பிரிந்துசெல்வானோ என்று தலைவியின் உள்ளத்தில் பல எண்ணங்கள் தோன்றின. அவற்றை அறிந்து தலைவன் எவ்வளவு அழகாகப் பேசுகிறான் பாருங்கள்:—

"யாயும் யாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"

"அன்புடை நெஞ்சம் தாமாகவே கலந்தன. இது நம்செயலால் அல்லது பிறர்செயலால் ஏற்படவில்லை; ஆகலின் பிரிவுஏற்படுமோ? என நீ வருந்ததே" என்று தலைவியைத் தேற்றுகிறான் தலைவன்.

நமதுமுன்னோர் அன்புவாழ்க்கையிலேயே இன்பம் அடைந்தவர்கள். ஆண்பெண்உறவின் அடிப்படை அன்பே. இந்த அன்பினாலே தம்நாயகர்களுடைய துயரை தம்துயராகக்கொண்டு வாழ்ந்தவர்கள் நம் தமிழ்நாட்டுப் பெண்மணிகள். "நும்மொடு துன்பம் துணையாக நாடின் அதுவல்லது, இன்பமு முண்டோ எமக்கு" என்பது ஒரு பெண்ணின் கருத்து. தலைவியர்களை எவ்வகையாலும் துன்பமடையவிடாது காத்துவந்தார்கள் தலைவர்கள். ஒருவரைஒருவர் பேணி, அன்பாகவாழும் வாழ்விலே உயர்ந்துவிளங்கினவர்கள் தமிழர்களாகையால், சிறந்தநாகரிகம்படைத்த மக்களிடை இருக்கவேண்டிய உயரியபண்புகளைத் தமிழ்நாட்டு விலங்குகளிடத்துங்கூட அவர்கள் புகுத்திப் பல காட்சிகளைச் சித்திரித்துளர். தொடக்கத்திலே ஒரு பெண்குரங்கின் கதையை அறிந்தோம். இனி ஆண் யானை ஒன்றின் கதையைக் கேளுங்கள். வெப்பம்நிரம்பிய கொடிய காட்டிலே தண்ணீர்தேடிச்சென்ற ஆண்யானையும் அதன் பிடியும் ஒரு சிறு நீர்நிலையைக் கண்டன. அந்த ஆண்யானை முதலிற்பெண் யானையை ஊட்டி அதன்பின்னரே தான் உண்டது. இந்தச்செய்தியைப் பாலைக்கலி கூறுகிறது.

இதனினும் சிறந்த செய்தி ஒன்றை ஐந்திணைஐம்பதிலுள்ள செய்யுள்ஒன்று கூறுகின்றது. வாழ்க்கையோ ஒரு பாலைவனம். இதிலே ஆண்பெண் தொடர்பினாலேயே உண்மையான இன்பம் உண்டாகும். வாழ்விலே கிடைக்கும் பொருளை இருவரும் சேர்ந்து நுகரவேண்டும். ஒருவரைவிட்டு ஒருவர் இன்புறமுயல்வது உண்மைஅன்பின் அடையாளமாகாது. ஒருவர் மற்றவருக்காகவே வாழுகின்ற உயர்ந்தபண்பாடு ஏற்பட்டால் வையகம் வானகமாக

மாறி மட்டில்லா இன்பத்தை நல்கும். இன்பதுன்பம் என்று நாம் கருதுவன யாவும் மனநிலையைப் பொறுத்தனவே. தனக்காக வாழுகின்றான் தன்நாயகன் என்பதை அறியும்பொழுதுஒரு நாயகியும், தனக்காக வாழுகிறாள் தன்தலைவி என்பதை அறியும்பொழுது ஒருநாயகனும், அடையும் இன்பத்தை அளவிடமுடியாது. "நோதலெவன்மற்று நொந்தாரென் றஃதறியும், காதலரில்லா வழி" என்று வள்ளுவர் கூறியதை நாம் உன்னிப்பார்க்கவேண்டும். ஒருவருக்காக மற்றவர் தியாகம்செய்யும் அன்புநிலைதான் உண்மைக்காதல்வாழ்வின் உச்சநிலை. இந்த நிலையைத் தமிழ்நாட்டு மான்களிடம்வைத்துக் காட்டுகின்றார் மாறன்பொறையன் என்னும் புலவர்பெருமான்.

தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டான். தலைவனது பிரிவைத்தாங்கமாட்டாது வருந்துகிறாள் தலைவி. தோழி அவளைத் தேற்றுகிறாள். "உன்னுடைய காதலர் சென்றவழியிலே, அவரைத் தெருட்டி உன்னிடம் திரும்ப அனுப்புதற்குரிய காட்சிகள் பலவுள; தன் பெண்மானுக்குக் குடிக்க நீர் போதாதென்று கருதிய கலைமான், தான் குடிப்பதுபோலக் கள்ளஞ்செய்து நீர் முழுவதையும் அதனையே குடிக்கச்செய்யும் காட்சியை அவர் கண்டால் உன்னை நினைந்து அவர் உடனே வருவார்" என்று கூறுகிறாள்.

"சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென்று எண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரமென்ப காதலர்
உள்ளம் படர்ந்த நெறி."

இவ்வாறு அரியகருத்துக்களை அள்ளிச்சொரிவன நமது அகத்திணைப்பாடல்கள். அவற்றைப்படித்து இன்புறுவது நமதுகடன்.

# [*ஸம்ஸ்க்ருத கவிதையில் இயற்கை]

# பாரவி.

திரு, V. சுப்பிரமணியஐயரவர்கள் B.A., L.T., பிரின்ஸிபால்
இராமேசுவரதேவஸ்தானம் பாடசாலை, மதுரை.

புவியின் திலகம்போல் இலங்கும் பாரதநாட்டில் இயற்கை வனப்புகள் மிக அதிகம். இமயம்போன்ற பெருமலைகளும், சிந்து கங்கைபோன்ற நெடுநதிகளும், நாட்டின் மூன்றுபுறங்களில் பெருங் கடல்களும், நாட்டினுள் ஆழமும் அகலமுமுள்ள நீர்நிலைகளும் விளங்குகின்றன. எங்கும் தளிர்களும் காய்களும் கனிகளும் அளவின்றிக் கொழிக்கின்றன. புள்ளினங்களுக்கும் கணக்கில்லை.

இவற்றை மனத்திற்கொண்டே, கவி பங்கிம்சந்தர் 'ஸுஜலாம்' என்று தொடங்கும் வந்தேமாதரகீதத்தைப் பாடினார். காளிதாஸ கவி 'அஸ்த்யுத்தரஸ்யாம்' என்று தொடங்கி, வடக்கில் தெய்வத் தன்மைபெற்று மலையரசாக விளங்கும் இமயம் இருக்கின்றது; என்று பெருமையுடன் பேசினார்.

பாரதநாட்டில் தோன்றிய மஹாகவிகளனைவரும் இயற்கையைப் பாடியிருக்கின்றனர். மஹாகவி பாரவி, பஞ்சமகாகாவியங்களில் ஒன்றும், அவரது ஒரேகாவியமுமான 'கிராதார்ஜுனீய'த்தில் இயற்கையை எங்ஙனம் கையாண்டிருக்கிறார் என்பதே இப் பேச்சின் விஷயம். பதினெட்டு சர்க்கங்களடங்கிய இக்காவியத்தின் மற்றநயங்களைப்பற்றியோ, கவியின் சரித்திரம் காலம் முதலியவைபற்றியோ இங்கு விவரிக்கவில்லை.

ஸம்ஸ்க்ருத கவிஞர் சிலர்க்கு, அவர்களுடைய வருணனைகளில் மிகவும் வியக்கத்தக்க கற்பனைகளைக்கொண்டு, பட்டப்பெயர்கள் அமைந்திருக்கின்றன. அவை;—தீபசிகா காளிதாஸன், கண்டாமாகன், சத்ர பாரவி; என்பனவாம். இவைகளில் நம் கவிக்கு இப் பெயரை வாங்கிக்கொடுத்த கற்பனையடங்கிய செய்யுள் பின்னால் விளக்கம் பெறும்.

---

* இது திருச்சிராப்பள்ளி அகில இந்திய ரேடியோ நிலயத்தினின்று 8—6—52ல் ஒலிபரப்பப்பட்டது; அந்நிலயத்தார் அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

கிராதார்ஜுனீய கதையின் பெரும்பாலான நிகழ்ச்சிகள் இமயத்தில் நடைபெறுகின்றன. இது நம் கவிக்குக்கிடைத்த ஒரு பெரும் பாக்கியம். உலகத்தின்கண் நிலவும் இயற்கை வனப்புகள் யாவும் ஒருங்கேதிரண்டு மலைவடிவாக அமைந்திருப்பதே இமயம். இதை பாரவி நன்குணர்ந்து காவியத்தில் இயற்கைவருணனைகளைக் கொட்டுவதில் தமது அற்புதக் கற்பனைத்திறனைக் காட்டியிருக்கின்றார். வழக்கமான வருணனைகளிலும்கூட அவருடைய தனிப்பட்ட சிருஷ்டிசக்தி பிரமிக்கத்தக்க அளவில் விளங்காமலில்லை.

வியாசபகவானின் உபதேசப்படி திவ்வியாஸ்திரங்களைப் பெறுவதற்காகத் தவப்புரிய அர்ச்சுனன் த்வைதவனத்தினின்றும் ஓர் யக்ஷனுடன் இமையத்தை நோக்கிச் செல்கின்றான். அப்பொழுது சரத்காலம். ஒருசர்க்கம் முழுதும் அதன் வர்ணனம்.

அதில் 'பதந்திநாஸ்மிந்' என்று தொடங்குகிற சுலோகத்தைக் காண்போம். சரத்காலத்தில் ஆகாயத்தில் வெள்ளைக்கொக்குகள் பறக்கவில்லை; மேகவரிசைகளை வானவில்கள் அலங்கரிக்கவில்லை. ஆயினும் ஆகாயத்திற்கு ஒரு தனிஅழகு இருந்தது. இயற்கை அழகிற்குச் செயற்கை அணிகள் தேவையில்லையே! என்பது; இதன் பொருள்.

அர்ச்சுனன் இமயத்தை அடைகின்றான். பர்வதத்தைக் கவி பதினைந்து செய்யுட்களால் வெகுகெம்பீரமாக வருணிக்கிறார். 'அவிரதோச்சித' என்று தொடங்கும் சுலோகம் அழகானது. வெட்டுண்ட இறக்கைகளையுடைய இமையத்திற்குக் கவி அதன் வடிவத்திற்கும் நிறத்திற்கும் ஏற்ற பெரிய வெண்மைநிறமுள்ள இறக்கைகளை மீண்டும் அமைத்துக்கொடுக்கிறார். அதன் விலாப் பிரதேசங்களிலே தொங்கிக்கொண்டிருக்கும், மழையை முற்றிலும் பொழிந்தபின் இடியும் மின்னலும் அற்ற, வெண்மையான சரத்காலமேகங்களே அவ் இறக்கைகள், இமையமலைக்கு மேகங்களைத் தவிர வேறெவை இறக்கைகளாக அமையமுடியும்?

'அயமேஷவிலோகித:' என்பது மற்றொரு சுலோகம். அர்ச்சுனனுடன் வந்த யக்ஷன், ஆகாயத்தைச் சிகரங்களால் ஆயிரமாகப் பிளந்துகொண்டு மிகப்பெரியதாய்நிற்கும் மலையரசைக்கண்டு வியப்பெய்தி, 'ஆஹா! இதைக் கண்ணுற்றால் எப்படிப்பட்ட பாவங்களும் தொலையுமே!' என்றான்; இங்கே மஹாகவி யக்ஷன்வாயிலாக ஒரு பெரிய தத்துவத்தை உலகிற்கு உணர்த்துகிறார். ஆகாயம், கடல்,

பெரியமலைகள், ஏரிகள், பெரிய வனங்கள் முதலிய இயற்கையிற் றோன்றும் பெரியபொருள்களைக் கண்டால், மனத்தின்கண் உலாவும் சிறியதனம் என்ற பாவங்கள் நீங்கி மனம்விரிந்து தூய்மையடைந்து பேரானந்தம் எய்தும் என்பதாம்.

'இஹாதாதிகமை:' எனவரும் இன்னொரு சுலோகத்தின் பொருள் இங்கு ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. விராட்புருஷனின் தத்துவத்தைப்பற்றி அறிதற்கரிய ஆகமங்களின், அதாவது வேதங்களின், உதவியால் அறிவாளிகள் சிறிதளவே கூறுவதுபோல, இந்த இமையத்தி னுட்பாகங்களைப்பற்றி ஏறமுடியாத ஆகமங்களைக் கொண்டு, அதாவது விருக்ஷங்களைக்கொண்டு, சிறிதளவே கூறுகின்றனர். புலனுக்கு எட்டாததும் திக்குகளை வியாபித்துநிற்பதுமான இந்த இமையத்தையோ அல்லது பரமபுருஷனையோ பிரம்மதேவன் ஒருவனே அறியவல்லவனும். என்னே! மஹாகவியின் அடக்கம்; உவமையின் பெருமைதான் என்னே!

இன்னும், 'நாநாரத்நஜ்யோதிஷாம்' என்னும் சுலோகத்தின் பொருளைப் பார்க்கலாம். கைலாஸபர்வதத்தில் பாறைஅடுக்குகளின் உட்பாகத்தில் மறைந்திருக்கும் பீடபூமிகளின் பிளவுகளில் பலவித இரத்தினங்களிலிருந்து கிளம்பும் ஒளித்திரள்கள், சுவர்களோ என்ற ஐயத்தை உண்டாக்குகின்றன. ஆனால் தடையின்றி வீசும் காற்று அந்த ஐயத்தைப் போக்குகின்றது. சுவர் என்றால் காற்று வரமுடியாதல்லவா? ஆனல் ஒரேபடியாக ஐயம்நீங்குகிறதா? இல்லையே. ஒளித்திரள்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன; காற்றும் வீசிக்கொண்டே இருக்கிறது. ஆகவே, சுவர் என்ற ஐயம் உண்டாவதும் மறைவதுமாகவே இருக்கிறது. என்று பாரவி உரைத்துள்ள இக் கற்பனையின் புதுமைபற்றி என்னசொல்வது?

மற்றொருகவி, 'உதபுல்லஸ்தல' என்று தொடங்குவது இங்கு மிக முக்கியமானது. இதன்பொருள் வருமாறு:—கைலாஸபர்வதத்தில் நிலத்தாமரைவனம் ஒன்றுள்ளது. அதில் ஒவ்வொரு பூவும் அலர மலர்ந்திருக்கிறது. சுழற்காற்று வீசுகிறது. மலர்களினின்று பொன்னிறமான மகரந்தப்பொடிகள்கிளம்பி ஆகாயத்தில் அடர்ந்து படர்ந்திருக்கின்றன. அற்புதமான காட்சி. மகரந்தப்பொடிப் படலம் கவிக்கு அழகிய ஓர் பொன்மயமான குடையாகத் தோற்றமளிக்கிறது. குடையின் தண்டம் பொடிப்படலத்திற்கும் கமலத்

திற்கும் ஊடேதோன்றும் இடைவெளியே. இந்தக் குடைக்கற்பனை கவிக்கு எங்ஙனந்தான் உதித்ததோ? இந்த உல்லேகமல்லவா அவருக்கு என்றுமழியாத 'சத்ரபாரவி' (குடைப்பாரவி)என்ற புகழ்ப் பெயரை வாங்கிக்கொடுத்தது?

மந்தாகினியாற்றிலே அப்ஸரமங்கையர் ஜலக்கிரீடை புரிகின்றனர். அதை வருணிக்கும் சுலோகம் ஒன்று 'அகூடஹாஸ' என்று தொடங்குவது. இதன்பொருள்:—ஒருமங்கை தாமரைமலர்களின் நடுவே ஒளிந்துகொள்கிறாள். அவளைக் கண்டுபிடிப்பதற்கு மற்ற மங்கையர் முனைகின்றனர். நீரில் உடல் மறைந்திருக்கிறது. முகத்தைப் பார்த்துத்தானே கண்டுபிடிக்கவேண்டும்? அவளது முகம் என்று நினைத்துச்செல்கிறார்கள். அது அலர்ந்த தாமரை மலராக இருக்கிறது. இது முகமா? அல்லது தாமரையா? என்று கண்டுபிடிக்க வெகுநேரமாகின்றது. எத்தனை தாமரைப்பூக்களைப் பார்த்துப்பார்த்துத் தங்களுடைய ஸகியின்முகமல்ல என்று ஏமாற்றமடைந்தனரோ? ஒவ்வொரு மலரிடம் செல்லும்போதும் நாமும் கூடவே செல்வதுபோ விருக்கின்றதே! தாமரைமலர்க் கூட்டத்தில் தாமரைபோன்ற முகத்தைத் தேடுவதற்கு நம்மை அழைத்துப் போவதன்மூலம் அழகென்னும் வெள்ளத்தில் நம்மை அமிழ்த்துகின்றனர் கவி. அது நம்மை ஆநந்தக்கடலைத்தவிர வேறெங்கு கொண்டுசேர்க்கும்?' அழகே ஆநந்தம். ஆநந்தமே பரப்பிரம்மத்தின் முடிவான வடிவம்!

ஜலக்கிரீடை முடிவுற்றது. இனி சாயங்கால நேரம். சூரியன் விழுந்ததைக்கூறும் சுலோகம், 'அம்சுபாணிபிரதீவபிபாஸு:' என்று தொடங்குவது. சூரியன், அதிகமாகக்குடிக்க ஆசைகொண்டு தாமரைமலர்களில் பெருகும் தேனாகும்மதுவை கிரணமாகும்கைகளால் அளவிற்குமிஞ்சிப் பருகிக் குடிமயக்கம் கொண்டவன்போல் பூமியில்விழுந்து புரளவிரும்பியவனாய் சிவப்புவடிவத்தை ஏற்றான். சூரியன் அஸ்தமித்தான் என்பதைச் சூரியன் பூமியில் வீழ்ந்தான் என்றுசொல்லும் வழக்கத்தையொட்டி அதற்கு ரஸமான மேற்கூறிய காரணத்தைக் கற்பிக்கிறார் கவி.

இனி, 'ஸம்விதாதுமபிஷேகமுதாஸே' என்பது சந்திரோதய வர்ணனம். ஆகாயத்தில் சந்திரன் உதித்து நிர்மலமாய்ப் பிரகாசிக்கிறான். வெள்ளம்போன்று நிலவு எங்கும் பெருகுகிறது. சந்திரகளங்கம் நன்றாய்த்தெரிகிறது. நீராம்பற்பூக்கள் நன்கு மலர்ந்திருக்

கின்றன. இந்த நிலையில் கவி ஓர் உல்லேகம் செய்கிறார். நிர்மல மான பூர்ணசந்திரபிம்பத்தை என்னவென்றுசொல்லுகிறார்? மூவுல கத்தையும் ஜயிக்கப்புறப்படும் மன்மதனுக்கு யாத்ராபிஷேகம் செய் தற்கு இரவு என்னும் மங்கையாலே உயர்த்தப்பட்ட வெள்ளிக்குடம் என்று. பெருகும் சந்திரகிரணங்கள் நீராகவுள்ள குடத்திற்குப் புஷ்பங்கள்வேண்டாமா? வேண்டும். அப்பொழுது தான் மலர்ந்த ஆம்பல்மலர்கள் அந்தக் கைங்கர்யத்தைச் செய்கின்றனவாம். அபி ஷேககுடத்திற்குச் சந்தனம் முதலான சின்னங்கள் எவை? சந்திர பிம்பத்தில்காணும் களங்கம். அடடா! மன்மதவிஜய யாத்ராபிஷேக சித்திரம் எவ்வளவு பூர்ணமாக அமைந்திருக்கிறது பாருங்கள்!

மற்றொரு சுலோகம், 'கதிபயஸஹகார' என்பது. இது குளிர் கால வர்ணனம். குளிர்காலம் என்பது எது? பனிக்காலத்திற்கும் வசந்தகாலத்திற்கும் இடையிலுள்ள ருது. கழிந்தருதுவின் தன் மைகளும் வரப்போகும்ருதுவின் தன்மைகளும் அதில் காணப்படு கின்றன. மாமரங்கள் சிலவே புஷ்பித்திருக்கின்றன. அம்மலர்க ளால் ருதுவானது கவர்ச்சிகரமாக இருக்கிறது. பனிக்காலம்போ லல்லாது சிறிதளவே பனி. ஸிந்துவாரபுஷ்பங்கள் கொஞ்சம்தான் மலர்ந்திருக்கின்றன. இங்ஙனம் ஹேமந்தம், வஸந்தம் இவ்விரண்டு ருதுக்களின் லக்ஷணங்களும் சிசிருதுவில் காணப்படுகின்றன. இப் படியிருப்பதால் சிசிருது மன்மதனுக்கு மிகவும் உகந்தது. இந்த ஒருசெய்யுள் மூலம் மூன்றுருதுக்களின் லக்ஷணங்களைக் கவி கூறி யிருப்பது வியக்கத்தக்கது.

இனி, 'குஸுமநகவநாந்' என்னும் சுலோகத்தினால், வஸந்தருது வின் எழில் பரவுகின்ற விதத்தைக் கவி வருணிக்கிறார். வஸந்தம் வந்ததும் வண்டுகளின் ரீங்காரம் எங்கும் ஒலிக்கின்றது. முதலில் தாமரை மலர்கள் விரிகின்றன. அடுத்தபடியாக மாமரங்களில் இளந்தளிர்கள் தோற்றமளிக்கின்றன. பின்னர்ப் பூமரங்களின் சிகரங்களிலே பூங்கொத்துக்கள் கொஞ்சுகின்றன. இந்த இயற்கை நிகழ்ச்சிகளைக் கவி சித்திரிக்கும் தோரணையே தனிப்பட்டது. வஸந்தலக்ஷ்மி என்னும் மாது ஒலிக்கும் வண்டுகளாகும் நூபுரங்க ளணிந்து, தாமரை மலர்களிலே காலைவைத்துத் தளிர்விட்ட மாங் கொப்பைப் பிடித்துக்கொண்டு, பூமரங்களின் உச்சிகளில் ஏறுகின் றாளாம். கற்பனையின் சிறப்புத்தான் என்னே!

இது நிற்க: 'கதமிவதவசம்மதி' எனவரும் முதுவேனிற் கால வர்ணனத்தைப் பார்க்கலாம். எங்கும் மல்லிகைகள் பூத்து வெளே ரென்றிருக்கின்றது. கவி இதைவைத்துக்கொண்டு சும்மாவிடுவா ரா? மல்லிகை மலர்ச்சியை ஓர் சிரிப்பு என்கிறார். யார் யாரைப் பார்த்து நகைக்கிறது? வேனிற்காலம் வசந்தகாலத்தை நோக்கி. என்ன சொல்லி நகைக்கிறது? 'ஏ வஸந்தருதுவே! அந்த அர்ச்சுன முனி, மற்றருதுக்களைப்போலவே உன்னையுந்தான் அவமதித்து விட்டார். உனக்கு யார் என்ன தனிமதிப்புத் தரப்போகிறார்கள்? என்று கூறி நகைக்கிறதாம்.

உத்ப்ரேக்ஷையின் நயம் ஒருபுறம் இருக்க இதில் ஒரு தத்வம் த்வனிக்கின்றது. அர்ச்சுனனது தவத்தைக் கலைப்பதற்குச் சென்ற அப்ஸரமங்கையருக்கு உதவியாய் இந்திரனால் ஆறுருதுக்களும் அனுப்பப்பட்டன. மங்கையர்கள் ஆடினர்; பாடினர். எல்லா ருதுக்களும் தனித்தனியே தமது முழுஆற்றலையும் வெளிப்படுத் தின. ஆயினும் ஜிதேந்திரியனான அருச்சுனனது மனம் சிறிதும் சலிக்கவில்லை. 'விகாரமடைவதற்குக் காரணமிருக்கும் ஸமயத்தில் எவரது மனம் விகாரமடைவதில்லையோ, அவரே தீரர்' என்று பொருள்படும் காளிதாஸ மஹாகவியினுடைய வாக்கியம் இங்கு நினைவிற்கு வருகிறது.

கிராதார்ஜுனீயத்திலுள்ள இயற்கைச்சித்திரம் ஓரளவே இங்கு எடுத்துக்காட்டப்பட்டது. இன்னும் படித்துச் சுவைக்க வேண்டிய அளவு மிகவும் அதிகமாகவுள்ளது. பாரவிகவி காளி தாஸ காவியங்களிலே, விசேஷமாகக் குமாரஸம்பவத்தில், ஈடுபட்டு அவரைப் பெரும்பாலும் தழுவியிருக்கிறார் என்பது எளிதாகப் புலப்படும். கிராதார்ஜுனீயம் பெரும்பான்மையாகப் படிக்கப் படுவதில்லை. இயற்கைச் சித்திரங்கள் அதில் பலஉள என்பது பலருக்குத்தெரியாது. 'பாரவேரர்த்தகௌரவம்' பாரவியின் சிறப்பு, கருத்துமேம்பாடு; என்றுகூறியிருப்பதே இதற்குக் காரண மாகலாம். உண்மையில் கவிபாரவி இயற்கைவருணனையில் மற் றெந்த ஸம்ஸ்க்ருத கவிக்கும் இளைத்தவரில்லையென்று துணிவுடன் கூறலாம்.

---

# நாலடியார்—திருத்தவுரை.

திரு. சத்தியவாகீசுவரையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருவநந்தபுரம்

[முன்தொகுதியில் ௧௪௪-ஆம் பக்கத்தொடர்ச்சி]

அதிகாரம்—செல்வநிலையாமை. பாட்டு—8.

38 பரவா வெளிப்படா பல்லோர்கண் தங்கா
உரவோர்கண் காமநோய் ஓஒ கொடிதே
விரவாருள் நாணுப் படலஞ்சி யாதும்
உரையாதுள் ஆறி விடும்.

இ—ள்:— (மனத்தை யடக்கியாளும்) திண்மையறிவில்லாத மூடர்க்கு ஒருநோய்போலிருக்கிற பெண்ணாசை அத் திண்மையறிவுடையாரிடத்தில் நாளுக்குநாள் மிகாது; பிறரறியும்படி புறத்தில் (உடம்பில் நிறவேறுபாடாகத்) தோன்றாது; பெண்கள் பலரைக் குறித்து அவர் மனத்தில் அது தங்குவதன்று. (மற்றென்செய்யுமெனில்) உற்றாரல்லாத பிறரிடத்தில் சொல்வதால் நாணங்கெடுதற் கஞ்சுதலால் சிறிதும் புறத்திற்சொல்வதற் கிடமாகாமல் உள்ளேயே தணிந்துவிடும். இத்தகைய பெண்ணாசையை ஓஒ கொடிது என்று சொல்லலாமா? சொல்லலாகாது. எ - று.

இருவர், மிகவும் கொடியதென்றார். அவ்வாறு பொருள் கூறுதற்குச் சொற்களில்லை. கொடிதென்று கூறற்குரியது மூடரின் பெண்ணாசை. பலரிடத்தும் சென்று தங்காதென்றனர்; விளங்கவில்லை. விரவாருள் நாணுப்படல் அஞ்சி—கலவாதவரிடத்து வெட்கப்படுவதற்கஞ்சி என்றனர். வெட்கப்படுவதே இங்கே கொள்ளத்தகும் ஒருவகை அச்சமாக இருக்க அதற்குமேல் அஞ்சுவதெதற்கு? அதனால் நாணங்கெடுதற்கஞ்சி என்பதே பொருளாம். படுதல் - கெடுதல். விரவார் - நண்பரல்லாதவர். உரம் - திண்மையறிவு. ஏ - எதிர்மறை வினா.

அதிகாரம்—ஈகை. பாட்டு—1.

39 இல்லா விடத்து மியைந்த அளவினால்
உள்ள விடம்போற் பெரிதுவந்து—மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையவா மாண்டைக் கதவு.

இ—ள்:—(இரவலராய் வருவார்க்குக் கொடுத்தற்குப்) பொருளில்லாதகாலத்திலும், தமக்குவைத்திருப்பதில் இயைந்த அளவினால் உள்ளகாலத்தில் (வேண்டுமளவு கொடுக்க அவர் மகிழ்வது) போல, இன்னும் அவர் மிகமகிழும்படி தம் மென்மைக்குணங்கள் தோன்றக் கொடுத்தலோடுபொருந்திய (அன்பு முதலிய) குணங்களுடைய மனிதர்க்குச் சுவர்க்கவாயிற் கதவுகள் (கொடாத லோபிகட்குப்போல) வாயிலடைக்க மாட்டா. எ-று.

உவந்து-உவர்க்களனத் திரிக்க. கொடை-கொடுத்தல். உம்மை எச்சப்பொருளில்வந்தது. பெற்றது சிறிதாயினும் கொடுப்போரது அன்புமாதாவுங்கண்டு இரவலர் மகிழ்வாராகையால், மகிழும்படி மென்மைக்குணங்கள்தோன்றக் கொடுத்தல் என்று கூறப்பட்டது. பெரிதுவத்தலைக் கொடுப்பாரது தொழிலாக்கினர் பிறர். தாம் நிரம்பக்கொடுத்தற்கில்லையே என்று வருந்துவதன்றி அவர் மகிழார். அதனால் அவ்வுரை நேரிதன்று. இல்லாவிடத்தும்-தமக்குச் செல்வமில்லாமற் போனகாலத்து மென்றனர். இல்லாதகாலத்திலியைந்த அளவு கொடுத்தல் எங்கிருந்து வரும்? ஈண்டுக் கொடுக்கப்படும் பொருள்-உணவும் உணவுப்பொருளாகிய தானியங்களும் உடைகளுமாம். கொடை என்றதனால் பெறுவார் சான்றோர். ஆண்டை-அவ்விடம், என்றது சுவர்க்கத்தை

40 கடுவூருள் வேதிகைச் சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றைப் பனை.

இ—ள்:—(முயன்றுபெற்றன அன்றிச் சிலரிடம் இயற்கையாகவே அமைந்துள்ள அமைப்பு விசேடங்களைக் காணவும் கேட்கவும் பலர்) விரும்புவதால் அவைகொண்டு சிவிப்பவர்

பலர்நச்ச வாழ்பவர். அவர்கள், ஊர்நடுவில் சுற்றுக்கோளாகிய ஒரு வேதிகையினிடையிற் புகுந்துவிட்ட பட்டபனைமரம் ஒன்றிருக்குமாயின் அதுபோன்றவராவர்; ஆனல் வேறு சிலர் அவரினுமிழிவுற்று வாழ்கின்றனர்; அவர் யாவரெனின் தாம்பிறந்தகுடி வருவாய்களாற் செழிப்புற்றிருக்கிற காலத்திலும் கொடுத்துண்ணுங் குணமில்லாமையால் பிறர்க்குச் சிறிதும் பயன்படாமல் இடுகாட்டி லேற்றைப்பனை போலத் தம்மை யாரும் நெருங்குதலின்றி உயிர்வாழ்கின்றனர். எ - று.

பலர்நச்ச வாழ்வார் உரிய முயற்சியாலன்றி இயற்கையமைப்பின் சார்பினற் சீவிப்பவர். ஆதலின் அவரிழிந்தவர்; ஆயினும் பலரால் விரும்பப்படுகின்றனர். கொடுத்துண்ணு மாக்களும் தம் முயற்சியாலன்றிப் பிறந்த குடிச்செழிப்பின் சார்பினல் வாழ்பவர். ஆனல் தம் நிலைமைக்கேற்பப் பிறர்க்குப் பயன்படாமையால் பலராலிகழப்படுகின்றனர். அதனல் பலர்நச்ச வாழ்வாரினும் அவர் இழிந்தவராயினர்.

பிறர்க்குப் பயன்படுங் குலத்திற் பிறந்தும் அக்குணம் தம்மிடமில்லாத நிலையிலிருக்கிற இடுகாட்டு ளேற்றைப்பனையோடு செழிப்புற்ற குடியில் கொடுத்துண்ணு மாக்களுக்கு முள்ள ஒப்புக் கண்டு கொள்க. பட்டபனை, வேதிகைச் சுற்றுக்கோளின் சார்பால் அழியாமல் இருத்தல்போல, பலர்நச்ச வாழ்வாரும் சீவித்தற்குரிய முயற்சியில்லாதவராகையால் சாதற்குரியராயினும் இயற்கையமைப்பின் சார்பின லுயிர்வாழ்கின்றனர். காய்ப்புள்ளதாயினும் சரி; ஊர்நடுவில் வேதிகைச் சுற்றுக்கோளினிடையில் பனையொன்றிருப்பது நடப்புள்ள தன்று; அதனல் இது இல்பொருளுவமை. இது தெரிவித்தற்குப் புக்க என்றார். இல்பொரு ளுவமையாகையால் பட்டபனை சுற்றுக்கோளிடையிற் புக்கது. உள்பொரு ளுவமையாயின் பச்சைப்பனையும் புகாது.

பலர்நச்ச வாழ்வாரின் இயற்கையமைப்பு - பிசிசொல்லுதல். இதனைப் புதிர், விடுகதை என்றல் வழக்கு. நொடி-பிறர்போற்பேசி நடித்தல். "பிசியும் நொடியும் பிறர்வாய்க் கேட்டு" மணிமேகலை. கழுதைபோற் கனைத்தல்; நாய்போற் குரைத்தல்; ஊமை செய்யும் ஆங்கியம்; கேட்டார் வியக்கும்படியுள்ள இன்குரலுடைமை; கூன் குறள் முதலிய உருவவிசேடங்கள் முதலியன பல. இரப்பார் விரும்பப் படுபவ ரல்லராகையால் பலர்நச்சவாழ்வா ரினத்திற் சேரார்.

பிறர் கூறியது பாட்டின் பொருளாகாமை அவர் உரைகண்டு தெளிக.

அதிகாரம்—குடிப்பிறப்பு. பாட்டு—1.

41 உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தம் கொள்கையிற் குன்றார்
இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா
கொடிப்புல் கறிக்குமோ மற்று.

இ—ள்:—(அற்றம் மறைத்தற்கும் தட்பவெப்பங்களை மறைத்தற்கும் பயன்படுவதான) உடையும் கந்தலாய் (உணவுபோதாமையால்) உடம்பு மெலிவுற்றகாலத்திலும், தாம் பிறந்த உயர் குடியின் பெருமை உடையவர் தம் கோட்பாட்டினின்றும் குறைவுறார்; சிங்கம் பசியால்வருந்தினும் கொடிப்புல்லைக் கடித்துத்தின்னுமா? தின்னாது; அதுபோல: என மேலே கூட்டுக. குடிப்பிறப்பாளர் கொள்கையாவது மிக்க வறுமையுற்றகாலத்திலும் மானங்கெட இரத்தல் முதலிய இழிதொழில் செய்யாமை. இதற்குக் குலத்துக்குரிய ஒழுக்கமென்றனர் பிறர். உடுக்கை, உடை, உடுப்பு என்பன; மறைத்தற்குச் சாதனமாகவுள்ளது என்றபொருளில் வருவன. உடுத்தல் - மறைத்தல். இதற் கிப்பொருள் அகராதியிலில்லையே எனில்? அகராதியிலில்லாமையால் அதற்குரியபொருள் மாறாது.

"உடுக்கை யிழந்தவன் கைபோல" என்ற இடத்தும் மறைத்தற் பொருளிருத்தல் காண்க. அற்றம் - உடம்பில் எப்பொழுதும் மறைத்தற்குரிய இடம். குடிப்பிறப்பு — "சான்றாண்மை சாயல் ஒழுக்க" மென்ற இவற்றிற் கிடமாய்ப் பரம்பரையாகவரும் குடும்பத்திற் பிறக்கும் பிறப்பு.

அதிகாரம்—இரவச்சம். பாட்டு—6.

42 இன்னா இயைக இனிய வொழிகென்று
தன்னையே தானிரப்பத் தீர்வதற்—கென்னைகொல்
காதல் கவற்றும் மனத்தினாற் கண்பாழ்பட்
டேதி லவரை யிரவு.

இ—ள்:—இனியனவாகிய சுகானுபவப்பொருள்கள் இனி வேண்டா. (அவை யில்லாமையால்வருந்) துன்பங்கள் வரட்டும். (அவற்றைப் பொறுத்துக்கொள்வேன்) என்றிவ்வாறெண்ணி, (வறுமையுற்றகாலத்தில்) தன்னைத்தானே நிறைவித்துக்கொள்ள, அதனால் தீர்வதான வறுமையை முன்னிட்டுச் (சுகானுபவத்தி லுள்ள) பற்றினால் கவல்விக்கப்பட்ட மனத்தால் அறிவழிந்து, தன்னையறியாத அயலாரிடஞ்சென்று இரத்தலைச்செய்தல் என்ன பயன் கருதி? அவாலது தீர்க்கப்படுமென்றா? தீர்க்கப்படாது; அதனா லிரத்தல்வேண்டா; என்பது எஞ்சிநின்றது.

கொல் - அசை. நிரப்பல் - திருப்திகொள்ளல். இனிய - இனியன - நுகர்பொருள்கள். இன்னா - அவைகிட்டாமையா லுள்ள சுகக்குறைவு. தன்னைத்தானே நிறைவித்துக்கொள்ளல் - நுகர்பொருள்கள் செய்த வேலையைத் தானேசெய்தல். தானென்றது புத்தியை. தன்னை - மனத்தை. காதலென்றது சுகானுபவத்தில்மிக்க பற்றினை. நிரப்ப - நிறைவிக்க. தீர்வதற்கு இரவு என்னை என முடிக்க. தீர்வதற்கு - வறுமைதீர்வதற்கு. இனி, இன்னா, இனிய என்பவற்றிற்குப் பொதுப்பட, துன்பஇன்பங்கள் எனவும், இனிய ஒழிக - இன்பங்கள்

நீங்கக்கடவன எனவுங் கூறினர் பிறர். இன்பங்கள் நீங்கல் அவர் கொண்ட கருத்திற்கு எதற்கு? விரிப்பிற் பெருகும்.

அதிகாரம்—அவையறிதல். பாட்டு—7.

43 பெறுவது கொள்பவர் தோள்போல் நெறிபட்டுக்
கற்பவர்க் கெல்லா மெளிய நூல்—மற்றம்
முறிபுரை மேனிய ருள்ளம்போன் றியார்க்கும்
அறிதற் கரிய பொருள்.

இ—ள்:—தாம் பெறும் பொருளுக்காக அதனைக் கொடுப்பவர் யாவராயினும் அவரைக் கொள்ளும் பொதுமகளிர் தோள்கள் அக்கொடுப்பவர்க்கெல்லாம் பயன்படுமாறுபோலக் கற்பவர் யாவராயினும் அவர்க்கெல்லாம் பயன்பட்டு நூல்கள் எளியனவாயிருக்கும். ஆனால், அம் மகளிர் மனம்போல நூல்களிற்பொதிந்துள்ளபொருள்கள் நுண்மதியுடையார்க்கும் அறிதற்கெளியனவாக இரா; அரியனவாக இருக்கும். எ - று.

முறிபுரை மேனியர் - தளிர்போன்ற நிறமுடையவர். பயனை நெறி என்றார் அது பின்னதாகலின். "அறத்தாறு" என்பதுபோல; திருக்குறள். கற்பவர்க்கெல்லாம் நூல்கள் பயன்படுதலெப்படி? வாயாற் படித்தற்கும் பருப்பொருள் காணுதற்கும் ஆதலே பயன்படுதலாம். பெறுவது—பெறும் பொருள் எனச் செயப்படுபொருள் மேல் நின்றது. பெறுவதுகொள்பவர் - நான்கன் தொகை. "பெறுவது கொள்வார்" என்பதற்குப் பரிமேலழகர் கொடுப்பவரைக் கொள்ளாது விலையைக்கொள்ளும் பொதுமகளிர் என்பர். திருக்குறள் 813. நெறிபட்டென்பதற்கு 'படிக்கிறவழியிலே இறங்கி 'ஒரு தொடர்புற்று' என்று பொருள்கொள்ளின் கற்பவரிற் சிலரைப் பிரிப்பதாய்க், கற்பவர்க்கெல்லாம் என்ற அதனுடன் மாறுகொள்ளும். அதனல் பிறர் அவ்வாறு கூறியது பொருந்தாது.

[தொடரும்.]

# தமிழ்மொழி

திரு. இராமசுப்பிரமணிய நாவலரவர்கள், தக்கலை.

## தமிழ்நாடு.

தமிழ், உலகமுழுதும் பரந்துவிளங்கியது எனச் சிலர் கூறுவர். அது அங்ஙனமாவது அகத்தியர்க்கு முன்னராதல் வேண்டும் எனவும், தமிழே தொன்முதன்மொழி எனவும் அவர் கூறுவர். ஆயினும் தமிழ் தொல்காப்பியர்காலத்து வடக்கு வேங்கடமலையையும் தெற்குக் குமரியையும் மேற்கும் கிழக்குங் கடலையும் எல்லையாகக் கொண்டு திகழ்ந்தது எனவும், இவ்வெல்லையகத்துச் சேர சோழ பாண்டியர் எனுந் தமிழ்வேந்தரே ஆட்சிசெலுத்தினர் எனவும் தொல்காப்பியத்தால் நாம் அறிகின்றோம். இக்காலத்துச் சில மலையாளிகள் சொல்வதுபோலச் சேரர் மலைமொழியைத் தாய்மொழியாக உடையவர் அல்லர் என்பதும், சேரநாடும் தமிழ்நாடே என்பதும் அந்நூலால் நன்குவிளங்கும். தொல்காப்பியத்தால், தமிழ்நாட்டகத்து அந்நாட்டுக்கு உரித்து என்னுமாறு பிறிதொருமொழி நடந்ததின்று என்பதும், தமிழர்சிலர் மலையாளத்தைக் கடைப்பிடித்துத் தமிழை அறவே மறந்தனர் என்பதும், மலையாளிகளுட் சிலர் ஈழவர், அம்பட்டர், நாயர் முதலியோர் தமிழ்நாட்டுமக்கள் அல்லர் என்பதும் உய்த்துணரலாகும். தமிழாட்சி நிலைகுலைந்த பொழுது, நாடு நாயர் கையிற் புகுந்திருக்கவேண்டும். சேர அரசரோடு இற்றையரசர் உறவுகூறுவரேனும், அவரொழுக்கமும் வழக்கும் மொழியும் நாயர்கள் என்னும் மலையாளிகளுடையனவே. 'நாயர்படை' என்பதொரு படை இன்னும் திருவாங்கூரில் உண்டு. நாயர் தமிழ்நாட்டவராயின் அப்பெயர் வரக் காரணமில்லை. நாட்டுப் படை என்பதே பொருந்தும். பிறநாடுகளில் தமிழர் படையெடுத்த பொழுது அப்படையைத் தமிழ்ப்படை என்று விதந்து கூறியது கொண்டு தமிழ்ப்படை என்னும் பெயர் பிறநாட்டில் வழங்கின் அது அந்நாட்டுக்குரிய படையன்று என்று அறிவதுபோல, நாயர் படை என்பது தமிழ்நாட்டுப் படையன்று என்று அறிதல் கூடும். தமிழ்வேந்தர் தமக்கு வலிமையாக நாயர்படையை(நாயர்பட்டாளம்,

பழைய பட்டாளம்) வைத்திருந்தனர். தமிழரசாட்சி சிதறுண்ட பொழுது நாயர்படைத் தலைவர்வழி நாடு நிற்கவேண்டிற்று என்னும் இவ்வுண்மை திருவாங்கூர் ஆட்சிக்குறிப்புநூலை நுணுக்கமாக ஆராய்ந்தால் விளங்கும் என்றும் கூறுவர் சிலர். இன்றைய மலையாள அரசர்க்கும் சேரர்க்கும் ஆட்சிபற்றி அன்றி மக்கள் உறவுமுறை பற்றி யாதும் தொடர்புஇன்று என்பது அவர் கொள்கை. சேரமான் பெருமாள் திருவஞ்சைக்களத்திருந்த தமிழரசர். அக்காலமுதற் கொண்டே சேரவரசாட்சி நிலைபெறத் தொடங்கியது. கம்பர்காலத்திற் கூறப்படும் சேரனுந் தமிழனே. அச்சேரனுக்கும் ஓரிருதலைமுறைகட்குப் பின், ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகட்கு முன் சேரவரசாட்சியில் நாயர்கலப்பு ஏற்பட்டிருக்கிறது. சேரவரசன் ஒருவன் நாயர்பெண்ணை மணந்ததனால், சேரவரசாட்சி நாயர்கைப்பட்டதென்றும், அதுபற்றி அரசனுடைய மகனுக்கு ஆட்சிஉரிமை இன்மையால் ஆட்சி அரசன் மருமகற்குச் சென்றதென்றும், மருமக்கட்டாயம் இற்றைச் 'சேர' ரிடை உண்டாவதற்கு அதுவே காரணம் என்றும் வழிமுறைக்கேள்வி (கர்ணபரம்பரை) உண்டு. இன்றும் அரசர் மணம்கொள்வது குறிப்பிட்டதொரு அரசச்சார்புடைய குலத்தினுகும். ஆட்சியரசரைத் 'தம்புரான்' (தம்பிரான்) என்றும் அரசர்குலப்பெண்களை மணப்பதற்குரியார் 'கோயித்தம்புராக்கள்' (கோயில்தம்பிரான்கள்) என்றும் கூறுகின்றனர். எனவே ஆட்சி அரசனுக்குக் கோயிற்றம்பிராக்கள் மைத்துனமுறையுடையராவதற்கு உரியர். கோயிற்றம்பிராக்களுடைய மக்களாய் ஆட்சியரசன் மருமகனாய் வருபவனே, அரசன் வழித்தோன்றலாய் ஆட்சிக்கு உரியவன். இம்முறையை நோக்குமிடத்து அரசனும் கோயிற்றம்பிராக்களும் சேரமரபினர் என்பதும், அரசன் பிறகுலப் பெண்ணை மணந்ததனால் அரசகுலம் மாறுபடாமைக்காகவே இம் மருமக்கட்டாய முறை தழுவப்பட்டது என்பதும் நன்குவிளங்கும். ஆட்சியரசன் இன்றும் அரசகுலத்தில் (கோயிற்றம்பிராக்கள் குலம்) மணஞ்செய்யலாகாது. அவன் பிற எவ்வகுப்பாரையும் மணம் புரியலாகும். இம்முறை அரசனது குலத்தகவின்மையை விளக்கும் என்று கொள்வது சாலாது. அரசகுலம் ஆட்சிக்குரிய குலம். அக்குலத்து அரசன் பெண்கொண்டால், அவன்மக்கட்கு மருமக்

கட்டாயமுறைப்படி ஆட்சி எய்தலாகாமையால், அரசனுக்கு அரச குலத்தின்கண் மணங்கோடல் விலக்கப்பட்டது என்க.

இப்பொழுது சேரநாட்டில் நாயர் வலிமிகுவதற்கு அவர் படைஞராயிருந்தமையும் அரசர்க்கு மணவுரிமை பூண்டமையும் சிறந்த காரணங்களாம். நாயர்என்ற சொல் நாயகர் என்பதன் திரிபு என்று சிலரும், நாகர் (நாகநாட்டவர்) என்பதன் திரிவு என்று சிலரும் கொள்வர். நாகநாட்டில் அழகுசான்ற பெண்கள் உளரென்றும் கரிகாலன்முதலியோர் நாககன்னியரை மணந்துள்ளாரென்றும் அறியப்படுகின்றன. 'வைகா' வையை எனத் திரிந்தது போல 'நாக' என்றது நாயர் எனத் திரிவதும் இயல்பு.

நாயர்களுடை நாட்டுமொழியும் வடநாட்டு 'நம்பூதிரிகள்' முதலியோரது தமிழ்க் 'கொச்சை' யுங் கலந்து மலையாளம் வடிவெடுத்தது என்பது தமிழர் பலருடைய கொள்கை. நாயர்களும் முதன்முதல் தமிழைக் கையாண்டுவந்திருக்கின்றனர். தமிழைத் தாய்மொழியாக உடைய நாயர்கள் இன்றும் சிலர் உளர்.

தமிழ்நாடாகிய சேரநாடு மலையாளிகளுடையது என்று இப்போது உரிமைபாராட்டப்படுவது பொருளற்றது. சேரநாடு தமிழர்க்கும், ஒருவழிச் சேரநாட்டு இக்கால அரசர்க்கும், உரியதாவதன்றி அது நாயர்கட்கு உரியதன்று. அரசர் மலைமொழி பேசுபவராயினும், பிறப்பான் அவர்கள் தமிழர்கள் என்று உணரவேண்டும். தென்திருவாங்கூரில் இன்று தமிழர்தொகையே மிக்குள்ளது.

## தமிழர்

தமிழர் ஆவார் யார்? என்பதற்குப் பலர் பல விடைகளைக் கூறிவருகின்றனர். தமிழர் தமிழ்நாட்டில் தோன்றிய பழந்தமிழ்க் குடிகளும் அவர் தம் பின்தோன்றல்களு மாவர் என்பது பொருத்தமான விடையாகத் தோற்றுகின்றது. தமிழர் என்பது பொதுப்பட வழங்குமிடத்துத் தமிழ்க்குடிகள்; தமிழ்நாட்டில் குடியேறியவர்; தமிழைத் தாய்மொழியாக உடையவர்; எனப் பலபொருளில் வழங்கும். தமிழ்வளர்ச்சிப்பொருட்டுத் தமிழைத் தாய்மொழியாக உடையவர் எல்லோரையும் நாம் தழுவிக்கொள்ளல்வேண்டும்.

தம் முற்ருேன்றல்கள் எம்மொழியினராயினும், ஒருவர் தம் தாய் வழிக் கற்றுவரத் தொடங்கியது தமிழாயின் அவர் தமிழரும் அவர் தாய்மொழி தமிழுமாம். தாய்மொழி என்பதற்கு ஒருவர்க்கு முதன் மொழியாயுள்ளது, தம் கருத்து நிகழ்ச்சிக்கு முதலிடமாயுள்ளது, தம் தாய்வழிப் பிறந்தது, என்பன பொருளாம். 'தாய்ச்சரக்கு' 'தாய்ப்பொருள்' 'தாய்வீடு' முதலியவற்றுள் தாய் என்பதற்குப் பெற்ருள் என்னும் பொருள் இல்லை.

தமிழர் பிறநாடுநின்றும் குடிபுகுந்தவர் என்னுங் கொள்கை பலரால் மறுக்கப்பட்டு விட்டது. வரலாற்று நூலாராய்ச்சியாளர் சிலருடைய அப்பொருளற்ற கூற்றுக்கு ஈண்டு இடமின்று. தமிழர் பிறநாட்டவராயின், எந்நாட்டவர்? அந்நாட்டில் வழங்கிய மொழி யாது? தமிழ்நாட்டில் தமிழ் எங்ஙனம் புகுந்தது? என்பனவாகிய கேள்விகளுக்கு விடை ஆராயவே, அக்கூற்றுத் தெறிபடும்; என்பது காண்க. பண்டைத்தமிழ்நாடு இற்றைத்தமிழ் நாடுமட்டும் அன்று, ஆபிரிக்கா முதலிய பிறநாடுகளிலும் சில பகுதிகளைத் தழுவிக்கிடந்தது, என்பதற்குச் சான்றுகள் பல கூறப்படுகின்றன. ஆகவே, அன்னோரன்ன பகுதிகளும் தமிழ்நாட்டுப் பகுதிகள் எனத் தழுவப்பெறும் எனவும் அவ்விடத்தவரும் தமிழராவர் எனவும் பலகாரணங்களால் பிற்காலத்துத் தமிழ்நாடு இற்றைத் தமிழ்நாட்டெல்லைத்தாகிக் குறுகிற்று எனவும் கொள்ளவேண்டும். இன்னும் இற்றைத்தமிழ்நாடு குறுகிவரநோக்குவது நோக்க, தமிழர் நோக்கில் முற்போக்கின்மை துணியப்படும். ஒருபால் தெலுங்கும், ஒருபால் கன்னடமும், ஒருபால் மலையாளமும் எப்பாலும் ஆங்கில முதலிய பிறமொழிகளும் தமிழ்நாட்டை வாய்க்கொள்ள முயல்கின்றன. தமிழர் புத்தெழுச்சி பெற்றுத் தம் நாட்டையும் மொழியையும் முற்கொணர முயலல்வேண்டும்.

## தமிழர்நாகரிகம்

தமிழர் தனிப்பட்ட நாகரிகமுடையவர். தமிழர் மேற்கொண்ட நாகரிகம் வாழ்நாள் நீட்சி, நோயின்மை, அறிவு, ஆராய்ச்சி, வீடுபேறு என்பவற்றை அடைவதற்கு இடமானதாய் இன்ப வாழ்க்கைக்கு ஓர் நிலையமாக உள்ளது. தமிழர் நடுவுநிலைமை

(பாரபட்சமின்மை) உடையவர். தமிழர்க்கு அறமே தலைசிறந்த நோக்கம். அறத்தின் அடிப்படையிலேயே தமிழர் வாழ்வு நிகழ்ந்து வருவது. தமிழிற்போன்ற அறநூல்கள் பிறமொழிகளில் இல்லை.

தமிழர் தொழில் பண்பு முதலியனபற்றியே மக்களை வகைப் படுத்தினர். தமிழில் வகுப்புக்கள் ஐந்தே. அவர் குறிஞ்சியர், மருதத்தர், முல்லையர், நெய்தலர், பாலையர் என்பார். குறிஞ்சி முதலிய ஐவகை நிலங்களிலும் வாழ்கின்ற மக்களைத் தமிழர் இடத்தியல் பால் வகுத்தனர். குறிஞ்சியர் - மலையர்; மருதத்தர் - நாட்டவர் (வேளாளர்); முல்லையர் - இடையர்; நெய்தலர் - கடலர்; பாலையர் - காட்டவர் என்க. இம் முறைவகுப்பால் வேளார் இடையர் என்பார் வடநாட்டவர் அல்லர், என்ற கருத்து உறுதிப்படுமாறு உணர்க. வடநாட்டவர் சிலரை வேளாளரோடும் இடையரோடும் ஒப்புக்கூறு வாராயினர் பிற்காலத்தவர் என்க. இவ் வைவகை மக்களிலும் தத் தந் நிலத்தையாளும் அரசர்களும் உளர். 'கோன்' என்பது இடைய ருள் ஆட்சிக்கு உரியாரை உணர்த்துவது காண்க. தமிழரசரின் கீழ்ச் சிற்றுாட்சி உடைய சிலர்க்கும் தலைவன், கோன், முதலி, நாட் டான், வேந்தன், 'இராயன்' முதலியபெயர்கள் வழங்கின. இராயன் என்பது பிற்கால வழக்கு. 'கோன்' என்பது 'கோபாலன்' என்பதன் மரூஉ என்பது முரண்படு கூற்றாகும்.

ஐவகை நிலத்து மக்களும் பிற்காலத்துப் பல்வேறு தொழிலிற் புகுந்தமை நோக்கித் தொழில்பற்றிய வகுப்புப்பெயர்களை மக்கள் வழங்கிவருவாராயினர். அவை முதன்முதல் தொழிலைமட்டும் குறித்து வந்தன. பின்னர் வகுப்புக்களைக் குறிக்கத் தொடங்கின. நாளடைவில் வகுப்புக்களில் பல வேற்றுமைகளும் பிறந்தன. கொல்லர், கொற்றர், தச்சர், ஓவர், வலைஞர், வேளாளர், செட்டியார் கன்னார், கம்மார், நாட்டார், மறவர் வேட்டுவர், கள்ளர், முதலிய பெயர்கள் தொழில் கருவி பண்புகளாலேயே தோன்றின. அவை இழிந்தார் உயர்ந்தார் என்பதைச் சுட்டுவன அல்ல. கொல், கொற்று, தச்சு, ஓ, கன், கம், வேட்டு, கள் என்பன தொழிற்பெயர்கள். வலை என்பது கருவிப்பெயர். செட்டு, மறம் என்பன பண்பு. நாடு என்பது இடப்பெயர். பெயர்கள் இடத்தாலும் மொழியானும் வழங் குவதும் உண்டு. சீனர் தெலுங்கர் தமிழர் என்பன காண்க. செட்டுடையவர் செட்டிகள். செட்டி என்பது வடமொழியில்

'ச்ரேஷ்டி' எனத் திரிந்தது என்ப. தமிழ்நாட்டில் வழங்கும் சில வடமொழி வகுப்புப்பெயர்களும் தொழில் முதலியவற்றையே குறிக்கின்றன. பண்டாரம், வணிகன், உவச்சன், (உபாத்தியாயன்) மாராயன் (அரசனால் சில மதிப்புக்கள் பெற்றவன்) குருக்கள் முதலியன காண்க.

தட்டான் என்ற தமிழ்ப்பெயர் தட்டுந்தொழிலைச் சுட்டுகின்றது. ஆசாரி என்ற வடமொழிப்பெயர் உயர்வைச் சுட்டுகின்றது. இதனால், தமிழரது விரிந்த உள்ளப்பான்மை உணரப்படும். பறையர் பள்ளர் என்பனவுந் தொழிலால்வந்த பெயர்களே. நாடான் என்பது இடத்தால் வந்தது. சான்றான் என்றது பண்பால் வந்தது.

*கணக்கன், பணிக்கன், குறவன், பாணன் முதலிய சில வகுப்புப்பெயர்கள் மலைநாட்டில் வழங்குகின்றன. அவையுந் தொழில் பற்றியவையே. சிலபெயர்கள் மருவி வழங்குகின்றன. மூழ்குவர்—முக்குவர்; வேளாளர்-வெள்ளாளர் என்பன காண்க. புலையென்பது புலாலுண்ணும் தன்மையாகிய இழிதகவு குறிப்பது. அத்தன்மைப்பட்ட தொழிலையுடையாரைப் புலையர் என்றது மக்கட்பண்பில் இழிவுகருதியன்று, தொழில்கருதி என்க.

தமிழரில் புலாலுணவை நீக்கியவரும் தழுவுபவரும் இருந்தனர். பெரும்பாலும் நெய்தனிலமாக்களும் பாலைநிலமாக்களும் புலாலுண்ணும் வழக்கத்தை மேற்கொண்டனர் என்பதும், ஏனையோர் பெரும்பாலும் புலாலை நீக்கி வாழ்ந்தனர் என்பதும் பண்டை அகப்பொருணூல்களால் விளங்குகின்றன. படைஞர்களும் புலாலை உண்டுவந்தனர். புலாலுண்பவருள் பெரும்பாலோரும் கள்ளுண்டு வந்தனர் என்றுந் தெரிகின்றது. கள்ளும் புலாலுந் தமிழருட் சிலர் தம் தொழிற் கடுமைபற்றி மேற்கொண்டனர் என்பதே அன்றி, அவற்றை உட்கொள்ளல் தமிழரது பொதுவழக்கம் என்னலாகாது. கள்ளும் புலாலும் அறிஞராற் கடியப்பட்டனவாகலான், அறிவின்மாக்களிடத்தும் அருந்தொழின் மாக்களிடத்தும் மட்டுமே அவற்றுக்கு இடமிருந்தது.

* நம்பியார் (மக்களுட்சிறந்தார்), அம்பலவாசிகள் (கோயிற்பணியாளர்), புதுவாள் (அரசனால் திருவாள் அளிக்கப்பெற்றவர்) தம்பிகள் (அரசனால் 'தம்பி' என்னும் பட்டம் அளிக்கப்பெற்றவர்) முதலிய சில வகுப்புக்களும் மலைநாட்டில் உள.

தமிழர் இயல்பிலேயே அஞ்சாமையும் வீரமுமுடையவர். போர்க்களத்துக் கண் இமைப்பினும் தோல்வியெனக் கருதும் மீளிகள் தமிழர். வீரமும் வெற்றியும் உடையராகித் தமிழர் ஆட்சிக் குழுவினராகவே இருந்தனர்.

தமிழர் மணவியல்பு பெரும்பாலுங் காந்தருவத்தியல்பு போன்றது. மணமகள் உள்ளம் ஒப்பாத மணம் தமிழர்க்கு இல்லை என்றால், தமிழர் மணவாழ்க்கை இன்பம் தலைசிறந்ததாமன்றோ? தமிழர் உண்மைக் காதலர், உண்மை அன்பினர், உண்மை இன்பினர். இயற்கைமணம் தமிழர் செல்வம். தலைமகள் உடன்பாட்டோடு நிகழும் களவும், மணமுறையாகிய கற்பும் தமிழர் தழுவினர். தமிழர் மணவாழ்வில் பெண்டிர்கள் உரிமை யாங்கணும் கதிரிட்டு விளங்கியது.

காந்தருவம் களவினல் மட்டுந் தமிழ்மணத்தை ஒக்குமன்றிப் பிறவரையறை முறைகளான் ஒவ்வாது. தமிழர் மணமுறை பிறதென்னாட்டினும் தழுவப்பட்டதில்லை. களவுமுறையைக் கொண்ட மணங்கள் எல்லாம் பிறநாடுகளில் ஒழுக்கமும் வரம்புமின்றி நிகழ்ந்தன. தமிழர்நாட்டில் அது உலகியல் ஒழுக்கத்திற்கும் கற்புக்கும் மாறுபடாத விதிகளால் நிகழ்ந்தது.

தமிழர் உயர்ந்த கருத்தும் நோக்கமும் முயற்சியு முடையவர். தமிழ் நூல்களிற் காணப்படும் சீரிய கருத்துக்கள் மேனாட்டவரையும் வியக்கச்செய்கின்றன. அவர்களுடைய வாழ்க்கை இயல்பு இரண்டற்று ஒன்றும் வீடுபேறு ஆகிய உயர்நோக்கத்தைக் கொண்டது.

தமிழர்க்குக் கந்தழி என்னுங் கடவுளும் ஒன்றே. உயிரனைத்தும் ஒன்றே. தமிழர்க்கு யாரோடும் வேற்றுமை இல்லை. உடம்பைக் கோதென்று கண்டு அதனை எப்பொழுது வேண்டினும் இழக்க ஒருப்படுவர் தமிழர். அன்பு, அருள், நட்பு, நன்றி முதலிய சிறந்த குணங்கள் தமிழர்பால் சிறந்து விளங்கின.

இசை ஓவியம் சிற்பம் இலக்கியம் முதலிய பலகலைகளினுந் தமிழர் கைதேர்ந்தவர். கலைகளில் இன்பங்காண்பர் தமிழர். இயற்கைப் பொருட்காட்சி இன்பத்தில் திளைப்பர் தமிழர். தமிழர்வாழ்வு

இயற்கை வாழ்வு. புதுமையினும் பழைமையும் இன்பமும்காண்பது தமிழர் பண்பு. தமிழர் வழக்கஒழுக்கங், கலைஉணர்ச்சி, அறிவு ஆராய்ச்சி, நாடு மொழி முதலியன எல்லாம் இனியவை. தமிழர் இனியர் அல்லரோ?

## தோன்மை

தமிழ் மிகப்பழைய தொரு மொழி. உலகில் இப்பொழுது உலவும் மொழிகள் அனைத்தும் வடமொழிச்சார்பு உடையனவும் தென்மொழிச்சார்பு உடையனவும் என இருவகைப்படும். ஆங்கிலம், இலத்தீன், அரபி முதலியன பெரும்பாலும் வடமொழிச்சார்பு உடையவை. தெலுங்கு கன்னடம் துளு மலையாளம் முதலியன தென்மொழிச்சார்பு உடையவை. ஆயினும் அவை நாளடைவில் சொற்களில் பலவித வேறுபாடுற்ற இலக்கண அமைதியும் சிறிது திரிந்து நிகழலாயின. இலத்தீன் அரபி முதலிய மொழிகளில் வடமொழியிற்போல ஒருமையும் இருமையும் பன்மையும் உள. மொழியாராய்ச்சியாளர் பலர் வடமொழிதென்மொழிகள் இரண்டினையுமே முதன் மொழிகளாகக் கொள்கின்றனர். எனவே, எல்லாமொழிகளுக்கும் முற்படத் தோன்றியவை அவ்விரண்டுமே எனலாகும். அவ்விரண்டனுள் யாது முந்திற்று என முடிவு கூறுவதற்கு உரிய கருவிகள் இல்லை. தமிழ் இராமயணகாலத்துக்கு முற்பட்டது என்பதற்குப் பல சான்றுகள் உள. ‘தென் சொற் கடந்தான் வடசொற் கடற் கெல்லை தேர்ந்தான்’ எனக் கம்பர் இராமனைத் தமிழ்வல்லோன் எனக் கூறுகின்றனர். தொல்காப்பியர் பரசுராமனுடைய தம்முன் என்பது நச்சினர்க்கினியர் கொள்கை. அங்ஙனமாயின் தமிழ் பரசுராமன் காலத்துக்கும் எத்துணையோ முற்பட்டது எனலாம். அகத்தியர் முதன்முனிவர் எழுவருள் ஒருவர் ஆகலின், தமிழ் அகத்தியர்க்கு முன்னது என்பதற்கு அகத்தியம் சான்று பகரும். சிலர் தமிழ் அகத்தியர் ஒருவரைப் புனைந்து படைத்துக்கொள்வதுண்டு. தமிழைப் பார்ப்பனர் எழுதினர் எனின், இழுக்கு என்னை? இன்று யார் யாரெல்லாம் தமிழ் எழுதுகின்றனர். அகத்தியத்துள்ளும் என்ப, என்றிசினோர் என்று முதனூலாசிரியரைச் சுட்டிக் கூறுவதுநோக்க, அகத்தியம் முதனூல் அன்று என்பதும் அதற்குமுற்பட்ட தமிழ்

நூல்கள் இருந்தன என்பதும் உணரப்படும். அந்நூல்கள் அழிந்து போனமையின் அகத்தியம் முதனூலெனப் பாராட்டப்பெற்றுவருகின்றது. காலவியல்பால் முதனூல் வழிநூலாதலும் வழிநூல் முதனூலாதலும் இயல்பு. தமிழ்நாட்டிற் புக்கு வாழ்வான் வேண்டித் தமிழ்கற்ற அகத்தியர்க்கு முன் தமிழும் தமிழ்நூலும் இல்லை என யார்கூற முற்படுவர்? நச்சினார்க்கினியர் முதற்சங்கம் முதலூழிக் காலத்தது என்பர். அதற்குத் தக்க சான்றில்லையேனும் அதுபோலுங் கருத்துக்கள் நல்லிசைமேவிய தொல்லிசைப் புலவர்கள் தமிழைத் தனிமுதற் றொன்மொழியாகக் கொண்டனர் என்பதை நன்கு விளக்குகின்றன.

## முத்தமிழ்

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பவை முத்தமிழ் எனப்படும். உரையும் செய்யுளுமாய்வரும் இலக்கண இலக்கியங்கள் எல்லாம் இயற்றமிழ் எனப்படும். இசை (இராகம்) சீர் (தாளவொத்து) என்பன இயைந்து நிகழுந் தமிழ் இசைத்தமிழ் எனப்படும். ஒன்பான் சுவைப்படத் தலைவன் றலைவியர்க்குரிய இலக்கணம் வழுவாது நாடக உறுப்புக்களோடு இயைந்து ஆடிக்காட்டப்படுவதற்கு உரிய அமைதிப்படவருந் தமிழ் நாடகத்தமிழ். நாடகத்தமிழில் இசையும் இயலும் கலக்குமாகலின், நாடகம் இயற்றுவார்க்கு முத்தமிழ் வன்மை வேண்டும். உரைநடையில் நாடகநூல்கள் இயற்றப்படுவது பிற்கால வழக்கு

பிறமொழிகளிலும் இம் முக்கூற்று நூல்களும் உளவேனும் தமிழும் வடமொழியும் ஒழிந்தவற்றுள் இவற்றுக்குச் சிறந்த இலக்கணம் வகுக்கப்படவில்லையாதலால், இவை பன்னெறிப்பட்டுச் சிதறுண்டு கிடக்கின்றன என்று அறியப்படும். இசைநாடகங்களிலும் தனித்தமிழ்நூல்கள் இருந்தன என்று அறியப்படுகின்றது. பண்திறம் சீர் முதலிய இசைத்தமிழ்ச் சொற்களைச் சிலப்பதிகார முதலிய நூல்களிற் காணலாகும். எழுவகை இசையொலி (சுரம்)களுக்கும் தமிழ்ப்பெயர்கள் உள.

[தொடரும்.]

ஸ்ரீ:

# மதிப்புரை.

---

1. கம்பர்கவிதைக்கோவை: I. இரண்டாம்பாகம் (கிட்கிந்தா—சுந்தரகாண்டங்கள்; II மூன்றும்பாகம் (யுத்தகாண்டம்):— [பதிப்பாசிரியர் அ. சே. சுந்தரராஜன் அவர்கள் B.A. இராமநாதன் கல்லூரி, சுன்னுகம், இலங்கை. ஒவ்வொரு பாகமும் தனித்தனி விலை ரூ. 2—8—0. இந்தியாவில் கிடைக்குமிடம்: சாரதாவிலாச பிரஸ், காரிக்காரத் தெரு, கும்பகோணம்.]

இராமாவதாரகாவியம், இலக்கண இலக்கியச் சொற்பொருள் வளம் நிரம்பிய ஓர் இன்பக் கடல். அதன் சுவைநுகர்ச்சி எல்லார்க்கும் எளிதிற் கைகூடுவதன்று. அதனல், தமிழ்க்கல்வி வளர்ச்சியடைந்துவரும் இக்காலத்திலும் கூட, அதனை அணுகமாட்டாமல் அகலநிற்பார் அநேகர் உளர். அவர்களிற் பெரும்பாலோரும் அவ்வின்பத்தைச் சிறிதளவாவது நுகர்தல் நன்று என்பது ஒரு சிறந்த நோக்கமாகும். இந் நோக்கத்துடன் இக் கோவையின் ஆசிரியர் இயன்றவளவும் முயன்றிருக்கின்றார்.

எல்லாம் இன்பமயமான பாடல்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுக்கும் சிரமத்தோடு, அவற்றைப் பிழையறப் பரிசோதித்து அழகுற அச்சிட்டு, தக்கோர் நன்மதிப்பும் பெறுமாறு பலரிடைப் பரவச்செய்தல் எவ்வளவு அரியகாரிய மென்பது, அவ்வகையில் வருந்தியுழைத்தவர்களே அறியவல்லவர்கள். இம் முயற்சியில் இவ்ஆசிரியரவர்கள் நற்பேறு படைத்தவர் என்றே சொல்லலாம்.

இக் கோவையின் முதற்பாகம் முன்னர் வெளிவந்த போது, அறிஞர்களின் பாராட்டு மிகவும் ஆக்கம் அளித்தது. அதனல் இப்பொழுது இரண்டு மூன்றும் பாகங்கள் வெளிவந்துள்ளன. இரண்டாம்பாகம் இருநூறுபாடல்களும், மூன்றும்பாகம் நானூறுபாடல்களும் கொண்டு விளங்குகின்றன. இவற்றிலும் முன்போலவே ஆரம்பக்குறிப்புகளும் அருஞ்சொல் விளக்கங்களும் அழகாக எழுதப்பட்டு விளங்குகின்றன. மாணவர்களேயன்றி ஏனைத் தமிழ்மக்களும் இதற்குப் பேரளவான ஆதரவளிக்கவேண்டும்.

---

**2. முருகவேள் பன்னிருதிருமுறை, உரையுடன். தொகுதி 1. பகுதி1:—** [உரையாசிரியர்—ராவ்பகதூர், தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை அவர்கள் M. A. விலை ரூ 1. வெளியிடுபவர்:—ஸ்ரீமதி. மீனாக்ஷிகலியாண சுந்தரம். 2, இரண்டாந்தெரு, வடக்கு கோபாலபுரம், சென்னை-6.]

இங்கே குறித்த பன்னிருதிருமுறை, அருணகிரிநாதர் அருளிய திருப் புகழ் முதலிய பிரபந்தங்களாகும். அவை முழுமையும் தெளிவாகவும் திருத்த மாகவும் வரையப்பெற்ற பதவுரை, பொழிப்புரை, குறிப்புரைகளோடு 96 பக்கங்கொண்ட ஒவ்வொரு தொகுதியாக மாதந்தோறும் வெளிவருமென்று தெரிகிறது.

இதன் உரையாசிரியர் வழிவழியாகத் திருமுருகனுக்கு ஆட்பட்ட குலத்தி லுதித்தவர், பொருட்செல்வத்தோடு அருட்செல்வமும் மிகப் படைத் தவர்; அருந்தமிழோடு ஆங்கிலமும் கற்ற புலமையாளரில் தலைமைசான்றவர். ஆகலின் இந்நற்பணியை ஆற்றவல்லவர் இவரையன்றி இக்காலத்து எவரு மிலர் எனின், அஃது இவரைப் புகழ்ந்துரைத்ததாகாமல் பொருளுரை யாகவே அமைகின்றது. இத்தகைய பெரியாரால் இயற்றப்பெறும் இவ் வுரைநூல் முழுதும் பழுதற்றதாய் என்றும் நின்று நிலவுமென்பதில் ஐய மில்லை.

தேவஸ்தானங்களும் மடாலயங்களும் போன்ற செல்வநிலையங்கள் மேற்கொள்ளவேண்டிய மிகப்பெரிய இந்நன்முயற்சியை, இதன் பதிப் பாளர் உலையாவூக்கமொடு இடையூறின்றி இனிதுநிறைவேற்ற முருகப் பிரான் திருவருள் முன்நிற்க வேண்டும்.

---

ஸ்ரீயோகி வேமன்னரின் பத்தியங்கள். தமிழ்ச்செய்யுள் மொழிபெயர்ப் பும் உரையும்:— [ஆசிரியர், திரு. செ. முனிகிருஷ்ணன் அவர்கள். விலை ரூ. 2–0–0. கிடைக்குமிடம்: அ. செ. முனிகிருஷ்ணன் 55, விளக்கொளிப் பெருமாள்கோவில்வீதி, விஷ்ணுகாஞ்சிபுரம். செங்கற்பட்டு ஜில்லா.]

வேமன்னர் ஆந்திரகவிஞராய்ப் பெயர்பெற்றவர். அவர் கவிகளைத் தமிழரும் தெரிந்துகொள்ளுமாறு ஆசிரியரவர்கள் மொழிபெயர்த்துத்தந்தது

ஆதரிக்கத்தகுந்ததே. மொழிபெயர்ப்பு வேலையின் அருமைதெரிந்தவர்கள் முனிகிருஷ்ணன் அவர்களின் முயற்சியைப் பாராட்டாமல் இருப்பதற்கில்லை. அதனால் மிகப்பெரிய பதவியிலுள்ளவர்கள் சிலரும் கூட இதற்கு நல்ல மதிப்புரை வழங்கியுள்ளார்கள். ஆனாலும், இதில் பார்ப்பனர் பகுதி, கோயில் பகுதி, தீர்த்தப்பகுதி, விரதப்பகுதி என்பனவற்றில் அடங்கிய கருத்துக்கள் எல்லாம் கண்டனங்களாகவே இருப்பதால், அவற்றை ஆராய்ந்து கொள்ளுதல் அறிவுடையார் கடனாகும். சித்தர்பாடலைப்போல, தெரிந்து கொள்ள அரியதான பொருளைப் படிப்பதற்கு எளியதான நடையில் அமைத்திருக்கும் காரணத்தால் பலபேர்களும் சுலபமாக இதிலிருந்து நல்லபலனை அடையமுடியுமோ என்பது சந்தேகமாகவே இருக்கிறது. பரம ஞானியர் செயல்களைப் பாமரரும் செய்யநினைப்பது பழிப்புக்கிடமாகும். அச்செய்கையை, யானை மதங்கொள்ளுவதற்கும் ஞமலி மதங்கொள்ளுவதற்கும் ஒப்பிட்டு ஆன்றோர் கூறுவதுண்டு. பரம்பரையாகப் பெரியவர்கள் பின்பற்றிவந்த நல்லவழிகளில் பற்றுதல் குறைந்துவரும் இக்காலத்தில், இதை வாசிப்பதனால் விபரீதபலன் விளையாமலிருக்கவேண்டும். நிற்க.

இப்புத்தகப்பதிப்பில் இலக்கணவழுக்களும், அச்சுப்பிழைகளும் அளவுக்கு மிஞ்சிக் காணப்படுகின்றன. முதலில், விநாயகர் வணக்கமான வெண்பா, "சீரார்ந்த வேமன்னர் செப்பியநன் ஆத்திரப்பா" என்று தொடங்குகிறது. அதனைஅடுத்து, 'அவையடக்கம்' என்பது 'இவையடக்கம்' என்று பதிக்கப்பட்டுள்ளது. இவைகள் இருவகைக் குற்றங்களுக்கும் ஸ்தாலீபுலாகமாய் முன்னணியில் நிற்பன. கடைசியிலுள்ள பிழைதிருத்தத்தில் கூட இவற்றைச் சேர்க்காமல் விட்டுவிட்டதும் ஒரு பிழையே போலும்.